# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 மார்ச் - 2000 இதழ் - 3




அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும்,
உம்மை நம்பியிருக்கிறேன்; நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்...... சங்கீதம். 143:8

# வாசகர்களின் கவனத்திற்கு

திருமறை ஆசான் மாத இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் தங்கள் பதிவு எண்ணைத் தவறாமல் குறிப்பிட்டு, தெளிவான முகவரியுடன் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

உங்களிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லையெனில் இதழ் நிறுத்தப்படும் என்பதை வேறு வழியின்றி வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தயவுசெய்து ஒத்துழையுங்கள்.



ஆசிரியர்.

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | ஆதியாகமம் ஒரு கண்ணோட்டம் | 10 |
| 3. | ஏலகிரி முகாம் - மே 1,2,3 - 2000 | 11 |
| 4. | கொள்கைச் சுத்தமாக இருப்பது எப்படி? | 12 |
| 5. | பெண்கள் பகுதி | 17 |
| 6. | வாலிபர் பகுதி | 20 |
| 7. | வெளிப்படுத்தின விசேஷம் | 23 |
| 8. | சிலுவையும், சபையும் | 28 |
| 9. | விசுவாசத்தின் அடிப்படைகள்-2 | 31 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

**Editor**
S. RAJANAYAGAM

**Honorary Editor**
J.C. CHOATE

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .13** **March - 2000** **Issue - 3**


*ஆசிரியவுரை*

## கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்

**ப**ரலோகத்தின் பரிசுத்த தேவனால், தன் இருதயத்திற்கேற்ற தாசன் என்று சாட்சியிடப்பட்ட தாவீது, பூலோகத்தில் வாழும் மனிதர்களின் சரீர அமைப்பு பற்றி ஆழ்ந்து சிந்தித்து, ஆவியானவரின் துணைகொண்டு, இவ்விதம் எழுதியுள்ளான். *"நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்ட படியால், உம்மைத் துதிப்பேன்...."* என்று (சங்.139:14). இச்சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பும் வெகு நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது என்று அதிசயிக்கிறான். இச்சரீரத்தின் இயக்கத்தை நாம் இன்னும் கொஞ்சம் கவனித்துப்பார்த்தால், சில உறுப்புகளின் பயன்பாடு மிகவும் அலாதியானது என்பது நன்றாகவே விளங்கும். இவைகளில் ஒன்றாக நமது கண்கள் உள்ளது என்பதை எல்லாருமே ஒருவாறு ஒத்துக்கொள்வோம். நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து *"கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது, உன் கண் தெளிவாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் கெட்டதாயிருக்கும்"* என்று கண்களின் சிறப்பு பற்றி அழகாக கூறியுள்ளார். (லூக்கா.11:34).

இப்படி சிறப்பான ஒன்றாக,பயன்பாடு மிக்க அளவில் கொடுக்கப்பட்டுள்ள கண்களைக் கொண்டு, நாம்ஒன்றை பலவகைகளில்பார்க்க முடியும். அவைகளில் ஒருவகை தான் ஏறெடுத்துப்பார்த்தலாகும். கண்களை உண்டாக்கின தேவன் பரிசுத்த வேத எழுத்துக்களில் *"உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்"* . என்று குறைந்தது ஐந்துமுறை கூறியுள்ளார். அதாவது, நீங்கள் சாதாரணமாகப் பார்க்கும்போது பார்க்க முடியாத, உங்கள் கண்களில்

படாத சிலகாரியங்களை ஏறெடுத்துப்பார்க்கும்போது பார்க்கமுடியும் என்று சொல்கிறார். ஆகவே எப்பொழுதும் ஒரே மாதிரியாக நமது பார்வையை வைக்காமல் தேவையான நேரங்களில் ஏறெடுத்துப் பார்ப்பதும் அவசியமாகவுள்ளது.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களால், தேவ மகத்துவம் சரியாக அறியப்படாத நிலையில் அதை அறிந்துக்கொள்ள *"உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்"* என்றும் ஏசாயா தீர்க்கனைக் கொண்டு சொன்னார் (ஏசாயா 40:26). மற்றும் தேவ நீதியை அறிந்துக்கொள்ள அவர்கள் தவறியபோது அதை அறிந்துகொள்ள *"உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்"* என்று ஏசாயா கூறியுள்ளார். (51:6) மேலும் பாவத்திற்கான தண்டனையைத் தெரிந்துக்கொள்ள *"உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்"* என்று (எரே.13:20) எரேமியாவைக் கொண்டும் இன்னும் பாவத்தின் தன்மையைக் கண்டுக்கொள்ள *"உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்"* என்று (எசே.33:25) எசேக்கியலைக்கொண்டும் சொல்லியுள்ளார்.

புதிய ஏற்பாட்டில், நமதாண்டாவராகிய இயேசு, ஒருசமயம் தன்னுடைய சீடர்களைப் பார்த்து, இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். *"அறுப்புக்காலம் வருவதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்"* என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா.4:35) இந்த வசனத்தை ஆதாரமாகக் கொண்டுதான், நாம் சில பாடங்களை இம்மாதம் கற்றுக் கொள்ளப் போகிறோம்.

இப்பொழுது,வழக்கம்போல இதன் பின்னணி பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, இரண்டாம் முறையாக, பெலஸ்தீனாவின் வடக்குப் பகுதியாகிய கலிலேயாவுக்கு ஊழியப்பயணத்தை மேற்கொள்ளவிருந்த சமயம் அது. (யோவா.4:1) அப்பயணத்தை, அவர், பெரும்பாலான யூதர்களைப் போல, சமாரியாவை தவிர்த்து மேற்கொள்ள விரும்பாமல், சமாரியவின் வழியாகவே செல்கிறார். அப்பொழுது சீகார் என்னும் ஊரும், அங்கிருந்த யாக்கோபின் கிணறும் வந்தது. அந்தக் கிணற்றருகே அவர் பிரயாணக் களைப்பிற்கு அமர்ந்து, தாகந்தீர்த்துக்கொள்ள விரும்பினார்.(யோவா.4:6,7). அப்பொழுது அங்கே வந்த, ஒரு சமாரிய ஸ்திரீயுடன் ஒரு நீண்ட உரையாடலை நடத்தி, தான் யார் என்பதை மறைமுகமாகவும், அவள் யார் என்பதை தெளிவாகவும் எடுத்துச்சொன்னார். இவ்வுரையாடலின் ஒரு கட்டத்தில் தான், *"உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்."* என்ற பேருண்மை வெளிப்பட்டது (யோவா.4:23).

அவருடைய உரையாடலின் தன்மையிலும், அவர் வெளிப்படுத்திய உண்மையிலும் ஈர்க்கப்பட்ட அந்தப்பெண், ஊருக்குள் சென்று, *"நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ"* என்றாள் (யோவா.4:29). அப்பொழுது சீகார் ஊரார் திரண்டு வந்தனர். அந்த சூழ்நிலையை மிகவும் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று இயேசு விரும்பினார். எப்படியெனில், மோசேயின் பிரமாணத்தில்தேறினவர்களென்றும்,தீர்க்கதரிசனங்களை அறிந்தவர்களென்றும் கருதப்பட்ட யூதர்கள், நீங்கள் எதிர்பார்க்கும் மேசியா நான் தான் என்று, வசனங்களை ஆதாரமாகக் கொண்டு எடுத்துரைத்தபோதும் நம்ப மறுக்கையில், மோசேயின் பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசனங்களிலிருந்து தங்களை விலக்கிக் கொண்டவர்களென்று கருதப்பட்ட சமாரியர்கள், ஒரு ஒழுங்ககெட்ட ஸ்திரீ, *இவர் கிறிஸ்துதானோ* என்று சந்தேகத்துடன் சொன்னதை நம்பி, ஓடோடி வந்தனர். கிறிஸ்துவைப்பற்றிய அணுகுமுறை, சுயநீதி பேசித்திரிந்த யூதர்களுக்கும், பாவிகளென்று கருதப்பட்ட சமாரியர்களுக்கும் எந்தளவில் இருந்துள்ளதென்பதற்கு இது சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளது.

சீகார் ஊர் சமாரியர்கள் இப்படி ஆர்வத்தோடு கூடிவந்திருக்கையில், அவர்களின் ஆன்மீக தேவைகள்பற்றி இயேசுவின் சீஷர்கள் கிஞ்சித்தும் கவலைப்படாமல், இயேசுவை போஜனம் பண்ணும்படி வேண்டிக்கொண்டார்கள். (யோவா.4:31) அப்பாவி மக்களின் ஆத்துமாக்களைப் பற்றிய பாரம் அணுவளவும் இல்லாமல், போஜனத்தில் நாட்டம் கொண்ட சீஷர்களுக்கு, *"பிதாவின் சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பது தான் உண்மையான போஜனம்"* என்று (யோவா.4:34) இடித்துக் காட்டியதோடல்லாமல் அவர்கள் முன்பாக இருக்கின்ற சவாலான பணியை இவ்விதம் எடுத்துரைத்தார். *"அறுப்புக்காலம் வருவதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்"* என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவா.4:35) என்றார்.

இயேசுவின் ஞானம் இந்த வசனத்தைச் சொல்லுவதற்கு அவர் பயன்படுத்திய சந்தர்ப்பத்திலிருந்து மிக நன்றாகவே நமக்கு விளங்கும். ஆம், இயேசுவும், அவருடைய சீஷர்களும், சீகார் ஊராரும் கூடி இருந்த இடம் ஒரு சமவெளிப்பகுதி. அதன் பெயர் மோரே. இப்பகுதி, கெர்சீம், ஏபால் என்னும் இரண்டு மலைகளுக்கு இடைப்பட்ட, விளைச்சலுக்கு ஏற்ற வளமான பகுதி. இந்த இரண்டு மலைகளின் மீது நின்றுதான் யோசுவா இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் கூறினான். (யோசுவா.8.அதி) அங்கே, இயேசுவின் கண்களுக்கும், சீஷர்களின் கண்களுக்கும், தங்கள் முன்பாக

கூடியிருந்த சமாரியர்கள் மாத்திரம் தெரியாமல் அவர்களின் பின்னணியில் பசுமைத் தோற்றத்தோடிருந்த பயிர்களும் நன்றாகத் தெரிந்தது. அன்றைய நாட்களில் விவசாயம் மாத்திரமே பொதுவான தொழிலாக இருந்ததால், விவசாயத்தைப் பற்றிய அறிவு ஏனையோர்க்கு இருந்ததுபோல், சீஷர்களுக்கும் இருந்தது. ஜனங்களின் பின்னணியில் உள்ள பயிர்களின் தன்மை பற்றி சீஷர்கள் தங்களுக்குள் பரிமாறிக்கொண்ட கருத்துக்களையும் இயேசு அறிந்திருந்தார்.

ஆகவேதான், தூரத்தில் தெரியும் பயிர்களைப் பார்த்து அது அறுவடைக்குத் தயாராக எவ்வளவு காலம் ஆகும் எனச் சொல்லும் நீங்கள், அதைக்காட்டிலும் அருகாமையிலுள்ள, ஆர்வம் மிகுந்த இந்த அப்பாவி ஜனங்களின் ஆன்மீக அறுவடை பற்றிக் கவலையின்றி இருக்கிறீர்களே, இது சரியாகுமா? என்று கேட்கிறார். சமாரியர்கள் சீஷர்களின் கண்களுக்கு முன்பாக தான் இருந்தார்கள். ஆனாலும் அவர்களின் சாதாரணப் பார்வையில் சமாரியர்களின் தேவையும், அதற்காகும் காலமும் புலப்படவில்லை. ஆகவேதான் இயேசு ***"உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்"***, அப்பொழுது, இந்த சமாரியர்கள் அறுவடைக்குத் தயாராக இருப்பது தெரியும் என்று கூறினார். இயேசுவின் கூற்று உடனடியாக மெய்யென்று நிரூபணமானது. ***"அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம் பேர் விசுவாசித்து, அந்த ஸ்திரீயை நோக்கி உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்"*** என்றார்கள் (யோவா.4:42).

நமதாண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு ஜனங்களின் ஆத்தும இரட்சிப்பில் எவ்வளவு அக்கறையிருந்தது என்பதற்கு யோவான் 4:35ம் வசனம் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. அதுபோலவேஇந்த வசனத்திற்கு சற்றும்குறைவில்லாத அளவில் அவரின் ஆத்தும பாரத்தை வெளிப்படுத்தும் வசனம் மத்தேயுவில் உள்ளது. ***"அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது அவர்கள் மேய்ப்பனில்லாதஆடுகளைப்போலதொய்ந்துபோனவர்களும், சிதறப்பட்டவர்களுமாய்இருந்தபடியால்அவர்கள்மேல் மனதுருகி,தம்முடைய சீஷர்களை நோக்கி அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்;ஆதலால்,அறுப்புக்குஎஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படிஅவரை வேண்டிக்கொள்ளுங்கள்"***என்றார்.(மத்.9:36-38)

யோவான் மற்றும் மத்தேயு சுவிசேஷங்களிலுள்ள பகுதிகளை நாம் ஒன்றிணைத்துப் பார்த்தால் இவைகளிலிருந்து நாம் சில பாடங்களை நமது கிறிஸ்தவ ஜீவியத்திற்காகக் கற்றுக்கொள்ள முடியும்.

## I. கண்களை ஏறெடுத்துப் பார்ப்போம்: *(யோவான் 4:35)*

நம்முடைய இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்து, தன்னுடைய சீஷர்கள், தான் எதிர்ப்பார்க்கின்றஅறுவடையைச் செய்யவேண்டுமானால், முதலாவது அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்க வேண்டுமென்று கூறுகிறார்.கண்களை ஏறெடுத்துப்பார்க்கும் போதுதான், தாங்கள் உண்மையாகவே எதை காணவேண்டுமோ அதைக் காண முடியும் என்பது வசனங்களின் போதனை. ஆனால், இன்றைக்குப் பரிதாபமான நிலைமை யாதெனில், அவருடைய சீடர்களாக இருக்கின்ற கிறிஸ்தவர்கள் (அப்.11:26) உண்மையாகவே அறுவடை எங்கே இருக்கிறதென்பதைக் கண்டுபிடிக்க தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்ப்பதில்லை. அன்றைக்கு எப்படி சமாரியாவில், இயேசுவோடிருந்த சீடர்கள், தங்களுக்கு முன்பாக அமர்ந்துக் கொண்டிருந்த திரளான ஆத்துமாக்களைப் பற்றிக் கவலைப்படாமல் அதற்குப்பின்னால் பசுமையாகத் தெரிந்த பயிர்களில் தங்கள் நாட்டத்தையும், நோட்டத்தையும் செலுத்தினார்களோ அதுபோல், இயேசுவின் காரியமாக ஆத்தும அறுவடை செய்யவேண்டிய பெரும்பாலான கிறிஸ்தவர்கள், எண்ணிலடங்கா ஆத்துமாக்களை அருகில் வைத்துக்கொண்டே, அவர்களைப் பற்றி அக்கறை கொள்ளாமல், உலகியல் மற்றும் பிழைப்புகடுத்த காரியங்களில் நாட்டத்தைச் செலுத்திக் கொண்டுள்ளார்கள்.

அப்போஸ்தலன் யோவான் எழுதும்போது, *"உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்....."* என்று கூறுகிறார்(1யோவான் 2:15). கிறிஸ்துவின் சிந்தை நமக்குள்ளாக இருக்க வேண்டுமென்று பிலிப்பியர் 2:5 ல் சொல்லப்பட்டுள்ளதுபோல், ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் **கிறிஸ்துவின் பார்வை இருக்கவேண்டியது அவசியம்.** ஆம், அந்தப் பள்ளத்தாக்கில், சீஷர்களின் பார்வைக்கும், கிறிஸ்துவின் பார்வைக்கும் பெரிய வித்தியாசம் இருந்தது. சீஷர்களின் பார்வையில் தங்களுக்கடுத்த காரியங்களும், கிறிஸ்துவின் பார்வையில் பிதாவுக்கடுத்த காரியங்களும் தெரிந்தது. ஆகவேதான், அவருடைய சீடர்கள் கூடியிருந்தவர்களைப்பற்றியக் கரிசனை ஏதுமில்லாமல்-அவர்களின் ஆத்மீகத் தேவைகளை கண்டுக்கொள்ளாமல், இயேசுவை சாப்பிட அழைத்தபோது, *"நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடையபோஜனம்"* என்றார்.(யோவான் 4:34)

அப்படியானால், அவரை அனுப்பினவரின் சித்தமென்ன? இதை யோவான் 3ம் அதிகாரம் 16ம் வசனத்தில், *"தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகமால், நித்திய ஜீவனை அடையும்படிக்கு,அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"*

என்று பார்க்கிறோம். பரலோகத்தில், தன்னுடனே வாசம் செய்யும் குமாரனை கொடுக்குமளவு தேவன் இவ்வுலகில் அன்பு கூர்ந்தார். இவ்வன்பு கூருதலின் நோக்கமென்ன? எல்லோரும் நித்திய ஜீவனை அடைய வேண்டுமென்பதுதானே. அப்படியானால் அந்த நித்திய ஜீவனுக்குள்ளாக ஜனங்களை வழிநடத்துவது யாருடைய வேலை? இவ்வேலையைச் செய்யவேண்டுமென்று தேவன் யாரை எதிர்பார்க்கிறார்? கிறிஸ்து இந்த வேலையை யாரிடத்தில் ஒப்படைத்தார்? உங்களுடைய பதில், அவருடைய சீஷர்களிடத்தில் என்றால், இன்றைக்கு அவருடைய சீடர்கள் யார்? கிறிஸ்துவை, அவருடைய உபதேசங்களின்படி ஏற்றுக்கொண்டவர்களே அவருடைய உண்மையான சீடர்கள்.

ஆக, அருமையானவர்களே, இன்றைக்கு புதிய ஏற்பாட்டின் முழுமையான உபதேசங்களின்படி இரட்சிப்பை பெற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள் தான், அவருடைய சீடர்களாக இருக்கிறபடியால், ஒவ்வொரு கிறிஸ்தவனும், தன்னருகிலுள்ள ஆத்துமாக்களை ஏறெடுத்துப் பார்த்து, அவர்களின் ஆன்மீக வாழ்வுக்கான காரியங்களைச் செய்வது அவசியம். ஆகையால், உங்களைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றிய உங்கள் பார்வை, தேவ எதிர்பார்ப்பின்படியாகவும், கிறிஸ்துவின் கட்டளையின்படியாகவும், வேதவசனங்களின் உபதேசப்படியாகவும் இருக்கிறதா என்று நிதானித்துப்பார்த்து குறையிருப்பின், நம்மை வசனங்களுக்கு நோக்கி, நமது கண்களை ஏறெடுத்துப் பார்ப்போமாக.

## II. தலைகளைத் தாழ்த்தி ஜெபிப்போம்: *(மத்தேயு 9:38)*

இரண்டாவதாக, நமது ஆண்டவர் அறுவடைக்குத் தங்களைத் தயார் படுத்திக் கொள்ள விரும்பும் சீடர்கள், அந்த வேலைக்கு ஆட்களை அனுப்பும் படியாக தேவனை நோக்கி ஜெபிக்கும்படி சொல்லுகிறார். ஒருசமயம், இயேசு ஊழியத்தினிமித்தம் பட்டணங்களையும், கிராமங்களையும் சுற்றி நடந்து, திரளான ஜனங்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல தொய்ந்துப் போனவர்களும், சிதறப்பட்டவர்களுமாய் இருக்கிறபடியால், அவர்கள் மேல் மனதுருகி சீஷர்களை நோக்கி: ***"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்"*** என்றார். *(மத்.9:36-38)*.

ஆகவே, ஆத்தும அறுவடைக்கு முன்பாக, கிறிஸ்தவர்களாகிய நாம் செய்யவேண்டிய காரியம், ஜெபித்தல்-ஆம், ஊக்கமாக ஜெபித்தல். முதல் நூற்றாண்டுக் காலத்தில், அந்தியோகிய பட்டணத்திலுள்ள சபையில், பர்னபாவும், சவுலும், ஊழியத்திற்கு அனுப்பப்பட்டபோது, அவர்கள் ஜெபித்தே அனுப்பப்பட்டார்கள் *(அப்.13:2,3)* முதல் நூற்றாண்டுக் காலத்தின் ஊழிய வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் இதுதான் இரகசியம்.

ஆனால், இன்றைக்கு கிறிஸ்தவத்தின் நிலைமை எப்படி? ஜெபத்தைப் பற்றிய உண்மை, அதன் மேன்மை, அதனால் கிடைக்கும் வல்லமை ஆகிய எதுவும் தெரியாமல், ஞாயிறு பள்ளிப் பிள்ளைகள் மனப்பாட வசனம் சொல்லுவதுபோல்

ஒப்புக்கு நான்கு வார்த்தைகள் சொல்லுகிறார்கள். இன்னும் ஒரு பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயம், தற்காலிகமாகக் கொடுக்கப்பட்ட ஜெபத்தை, அதன் (மத்.6:9-13)அர்த்தமும், கொடுக்கப்பட்டதின் நோக்கமும் தெரியாமல் ஒப்பித்துக் கொண்டுள்ளார்கள். ஆகவேதான், பெரும்பாலானவர்களுக்கு ஜெபத்தின் வல்லமையால், கைவிலங்குகள் கழன்று விழுந்ததும், பட்டணத்தின் இரும்புக் கதவு தானாய் திறந்ததும் (அப்.12:7,10) சிறைச்சாலையின் அஸ்திபாரம் அசையும் படியாய் பூமி அதிர்ந்ததும், கதவுகள் திறவுண்டதெல்லாம்(அப்.16:26) பழங்கதையாகவும், கூட்டுக்குஉதவாத ஏட்டுச் சுரைக்காயாகவும் தெரிகிறது. ஒருவேளை, அற்புதங்கள் முதல் நூற்றாண்டோடு முடிந்துபோனாலும், நீதிமான்களின் ஊக்கமான ஜெபத்திற்கான வல்லமை இன்னும் இருக்கவே செய்கிறது.

நமது ஆண்டவராகிய இயேசு, இப்பூமியில் வாழ்ந்த போது, ஜெப வீரராகவே இருந்தார். முக்கியமான சந்தர்பங்கள் அனைத்திலும் அவர் ஜெபிக்கத் தவறியதில்லை (லூக்.3:21, 6:12-16,9:28,29; மத்.26:36-42). அதைப்போலவே, அவருடைய சீடர்களும், முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களும் (அப்.2:42) இருந்தார்கள். ஆனால், இன்று சீடர்கள், என்று அழைக்கப்படுகிற கிறிஸ்தவர்கள், தாங்கள் ஜெபிப்பதற்கு பதிலாக, ஜெபிக்கின்ற யாருக்காவது கூலி கொடுத்தால் போதும் என்று நினைக்கிறார்கள். இக்கால சீடர்களின் இந்த இழிநிலையை, ஊழியம் என்ற பெயரால் வியாபாரம் செய்யும் சிலர், மிகவும் லாவகமாக பயன்படுத்தி, தங்கள் பைகளை நிரப்பிக் கொள்ளுகிறார்கள்.

பரலோகத்தின் தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை பூமிக்கு அனுப்பினதின் நோக்கமும் ஒரு பாவமும் அறியாத அந்த தேவக்குமாரன் சிலுவையில்மரித்ததின் நோக்கமும் இப்பூமியில் நிறைவேறவேண்டுமானால், ஜெபத்தைப்பற்றிய கிறிஸ்தவத்தின் எண்ணமும், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களின் எண்ணமும் அடியோடு மாற வேண்டும். இன்றைக்கு உண்மைச் சத்தியத்தை தாங்கிப் பிடிக்கும் கர்த்தருடைய சபைகள் வளர வேண்டிய அளவு வளராமல் இருப்பதற்குக் காரணம், ஆத்துமாக்களைப் பற்றிய பாரம் இல்லாததும், ஆத்துமா அறுவடைக்காக ஜெபிக்காததும் தான். இது ஒரு மறுக்க முடியாத உண்மை.

ஆகவே, எனக்கன்பானவர்களே! நம்முடைய கண்களுக்கு முன்பாக ஒவ்வொரு நாளும் அழிந்துப்போய்கொண்டிருக்கிற அநேகமாயிரம் ஆத்துமாக்களுக்காகப் பரிதபித்து, அவர்களின் இரட்சிப்புக்காகவும், இரட்சிப்பு என்றபெயரில் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு மாறாக, தங்களை மனித கோட்டபாடுகளின் படியான உபதேசங்களுக்கு ஒப்புக்கொடுத்து ஏமாந்து நிற்கிற ஏராளமான மக்களுக்காகவும் ஜெபிப்போமாக!

## III. அறுப்புக்குச் செல்லுவோம். *(மத்தேயு 9:37)*

கண்களை ஏறெடுத்துப்பார்த்து, ஜெபித்து, பிறகு நாம் செய்யவேண்டிய காரியம், அறுப்புக்கு புறப்படுவதாகும்.

மத்தேயு 10ம் அதிகாரம் 6ம் வசனம், ***"காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு போங்கள்"*** என்று இயேசு சொன்னாதாக உள்ளது. அப்படி அனுப்புவதற்கு முன்பாக முந்தின அதிகாரத்தில் ஜனங்களின் நிலையை சீடர்கள் காணும்படியாகச் செய்கிறார்.அப்புறம் தேவனை நோக்கி ஜெபிக்கச் சொல்கிறார். அதன் பிறகு, சீடர்களைப் போங்கள் என்று கட்டளையிடுகிறார். இயேசுக்கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட பிராதன கட்டளையை நாம் கவனித்தால் இரண்டு இடங்களிலுமே (மத்.28:19, மாற்கு16:15). இயேசு சீஷர்களைப் பார்த்துப் போங்கள் என்றுதான் சொல்லுகிறாரே தவிர, யாரையாவது அனுப்புங்கள் என்று சொல்லவில்லை.

ஆகவே, சீடர்களாக இருக்கும் கிறிஸ்தவர்கள், அதாவது, இயேசுக் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட முழுமையான உபதேசத்தின்படியாக இரட்சிப்பைப் பெற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் ஆத்துமா அறுவடைக்குச் செல்ல வேண்டியது அவசியம். யாரும் இதற்கு விதிவிலக்கு அல்ல.அது மூப்பர்கள், உதவிகாரர்கள் மற்றும் ஊழியக்காரர்கள் போன்றோரின் வேலை என்று தட்டிக் கழிப்போமானால், நாம் அவருடைய உண்மையான சீடர்கள் அல்ல.

முதல் நூற்றாண்டிலே, ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆத்தும ஆதாயப்பணியை ஒருவித அவசரத்தோடு செய்தார்கள் என்று வசனத்தில் காணமுடியும், ***"தினந்தோறும் தேவலாயத்திலேயும், வீடுகளிலேயும்,இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்".*** (அப்.5:42). ***"சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள்"*** (அப்.8:4).***"அவர்களைக் காணாமல், யாசோனையும், சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு வந்து : உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் இருக்கிறார்கள்."***(அப்.17:6).முதல் நூற்றாண்டு சீடர்கள் உலகத்தைக் கலக்குகிறவர்கள் என்று சொல்லுமளவிற்கு சுவிசேஷப்பணி செய்தனர்.

முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் இந்த அவசரமான செயல்பாட்டுக்கு காரணம் என்ன? இயேசுவானவர் சொன்னதுபோல், வயல் நிலங்கள் அறுப்புக்கு தயாராக இருந்தது.(யோவான் 4:35). எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாக இருக்கிறார்கள் என்று வேத வசனம் கூறுகிறது. (ரோமர் 3:23). ஆக, உலகமானது இன்றும் ஆத்தும அறுவடைக்கு தயாராகவே உள்ளது. ஆத்தும அறுவடையைக் கொடுப்பவர் கர்த்தர். ஆகவே, என்ன நடக்கும், ஏது நடக்கும் என்று நாம் கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிருக்கத் தேவையில்லை. ஒரு சமயம் பவுலடியார் கொரிந்துப் பட்டணத்தில் ஊழியம் செய்த பொழுது சுவிசேஷம் சொல்லுவதற்கு எதிரான நிலைவந்தது. அப்பொழுது கர்த்தர் அவனுக்கு தரிசனமாகி : ***"நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனே கூட இருக்கிறேன் ,உனக்கு தீங்கு செய்யும்படி, ஒருவனும் உன்மேல் கை போடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு"*** என்றார் (அப்.18:9,10) அங்கே, பவுலுக்கு, நீ

சுவிசேஷத்தை பிரசங்கம் செய், ஆத்துமாக்களை நான் தருகிறேன் என்று கூறுகிறார். பவுலுடைய சுவிசேஷப் பிரசங்கங்களுக்கு ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்தின தேவன், நீங்களும், நானும் அந்த வேலையை உண்மையாகச் செய்வோமானால் ஆத்துமாக்களைக் கொடுக்க மாட்டாரா, என்ன?!

ஒருவேளை இந்தக் காரியத்தைச் செய்ய நாம் மறுப்போமானால், நம்முடைய பகுதியில் அழிந்துபோகும் ஆத்துமாக்களுக்கான கணக்கை தேவன் நம்மிடத்தில் தான் கேட்பார். எசேக்கியேல் தீர்க்கனைக் கொண்டு கர்த்தர் கொடுத்துள்ள வசனத்தை தயவுசெய்து கவனியுங்கள். ***"மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்திற்கு காவலாளனாக வைத்தேன் ; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்த்தையும், தன் ஆகாத வழியையும் விட்டு திரும்பாமற்போவானகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான். நீயோ -வென்றால், உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்". (3:17,19)*** இந்த எச்சரிப்பின் வசனம் நாம் ஒவ்வெருவரும் ஆத்தும அறுவடைக்குச் செல்லுவது எவ்வளவு அவசியம் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

ஆகையால், அருமையானவர்களே நாம் ஒவ்வொருவரும் நம்முடைய இரட்சகராகிய இயேசுவின் அறிவுரைப்படி, நமது கண்களை ஏறெடுத்துப்பார்த்து, ஜெபித்து, அறுப்புக்குப் புறப்படுவோமாக! அப்படி செய்வோமானால், அதற்கான பலனை பரலோகத்தின் தேவன் நமக்கு நிச்சயம் தருவார்!! ஆமென்.

S. ராஜநாயகம்

## வானம் திறக்கப்பட்ட சம்பவங்கள்

*1. இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது திறக்கப்பட்டது (மத்.3:16)*

*2. ஸ்தேவானின் மரணத்தின் போது திறக்கப்பட்டது (அப்.7:56)*

*3. பேதுரு யோப்பா பட்டணத்தில் தரிசனங்காணும் போது ..(அப்.10.11)*

*4. பவுல் கூறிய மனிதன் மூன்றாம் வானம் வரை எடுத்துக்கொள்ளப்பட்ட போது...(2 கொரி. 12:2)*

# ஆதியாகமம் ஒரு கண்ணோட்டம்



I. பொருள் : ஆரம்பம் அல்லது தொடக்கம்

II. ஆசிரியர் : மோசே

III. காலம் : ஏறக்குறைய கி.மு. 1400.

2500 வருட வரலாற்றுச் சம்பவங்களை உள்ளடக்கியது. பழைய ஏற்பாட்டுக் மொத்த (கி.மு.4004)காலங்களில் இப்புத்தகம் பாதிக்கும் மேற்பட்ட வருடங்களை உள்ளடக்கியிருக்கிறது

IV. முக்கிய வார்த்தை : ஆரம்பம்

V. இது தரும் பாடம் :

எல்லா ஜீவனும் தேவனிடத்திலிருந்து தோன்றியிருப்பதால் அவை அனைத்தும் இவ்வுலக வாழ்விலும், நியாயத்தீர்ப்பின் போதும் தன் ஆத்துமாவிற்கு பொருப்புள்ளதாய் இருக்கிறது.

VI. இந்நூலின் முக்கியத்துவம் :

அ. இது வரலாற்றுச் சம்பவங்களின் நூலாய் இருப்பதால், இதன் முக்கியத் தகவல்கள் இல்லாமல், எஞ்சிய பழைய ஏற்பாட்டையும், ஏறக்குறைய புதிய ஏற்பாடு முழுவதையும்புரிந்துகொள்ளுவது கடினம் என்றே சொல்லலாம்.

ஆ. இந்நூல் இலக்கிய உலகில் எக்காலத்திலும். பெயர் பெற்ற ஒன்றாக கருதப்படுகிறது.

இ. இந்நூலின் முக்கிய அம்சம் ஆன்மீகமாய் இருக்கிறதே தவிர இலக்கியமாகவோ அல்லது வரலாறாகவோ இல்லை. சர்வ வல்லவரும், மிக நல்லவரும், பரிபூரண ஞானியுமான ஒரே தேவனின் வெளிப்பாட்டை இப்புத்தகத்தில் நாம் காணலாம். இப்பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கும், தேசங்களின் வரலாற்றுக்கு தேவனுக்கும் உரிய தொடர்பை குறித்து நமக்கு இப்புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஈ இந்நூலில் இடம் பெற்றுள்ளவர்கள் கற்பனை மனிதர்களாகஇல்லாமல், தேவன் உண்மையாகவே அவர்களோடு நேரடித் தொடர்பு கொண்டு பேசிய வ்ரலாற்று மனிதர்களவே உள்ளனர். தேவன் அவர்களுக்கு இரக்கத்தையும், கிருபையையும் காண்பித்தவராக மாத்திரம் இல்லாமல் அவர்களின் சந்ததியிலிருந்து ஒரு மீட்பரை எழும்பப் பண்ணுவேன் என்றும், உலகம் அனைத்தும் அவரால் ஆசீர்வதிக்கப்படும் என்றும் அவர்களுக்கு வெளிப்படுதினார்.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!


# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

இடம் : **YMCA வளாகம், ஏலகிரி மலை** (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து, **சுமார் 25 கி.மீ)**
திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து **சுமார் 30 கி.மீ)**

**நாள் : மே மாதம் 1,2,3 - 2000 (திங்கள் - புதன்)**





**உணவும், தங்குமிடமும் இலவசம்**
**பதிவுக் கட்டணம் ரூ.75.00 மட்டுமே**

தொடர்பு முகவரி : **கிறிஸ்துவின் சபை**

*195, தாராபுரம் ரோடு, **காங்கயம்** - 638 701*

**✆ : 04257 - 20030**

குறிப்பு : சுமார் 200 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.



# கொள்கைச் சுத்தமாக இருப்பது எப்படி?

நீங்கள் இருக்குமிடத்தில் கர்த்தருடைய சபையைத் தொடங்குவது எப்படி என்ற தொடர்பாடத்தில், நாம் இப்பொழுது பார்க்க இருப்பது, கொள்கைச் சுத்தமாக இருப்பது எப்படி? என்பது.

சில காரியங்களில் சரியாகவும், சில காரியங்களில் தவறாகவும் இருக்க வாய்ப்புண்டு. ஆகவே தான், கர்த்தருடைய சபையைத் தொடங்குவதில் உள்ளடங்கியிருக்கும் எல்லாக் காரியங்களையும் நாம் முழுமையாக ஒரு பாடத்தில் பார்க்க முடியாது. நம்முடைய முந்தின பாடங்கள் எல்லாவற்றையும் கவனித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். ஒருவேளை அப்படியில்லாமல், உங்களுக்கு அதிகப்படியான தகவல்கள் தேவையானால், தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நாங்கள் சிலவற்றை உங்களுக்கு அனுப்புகிறோம்.

இப்பொழுது, கொள்கைச் சுத்தம் என்று நாம் எதைச் சொல்லுகிறோம், அது ஏன் அவ்வளவு முக்கியமானது? நாங்கள் இங்கே கொள்கை, உபதேசம் மற்றும் இரட்சிப்பையும், இரட்சிப்பில் நிலைத்திருப்பதையும் குறித்து போதிப்பதில் அடங்கியிருக்கும் உண்மை அல்லது சத்தியம் ஆகியவை குறித்து பேசுகிறோம்.

தேவன் பேசினார் என்பதை நாம் அறிவோம் (எபி.1:1,2) கிறிஸ்து வார்த்தையாக உள்ளார் என்று சொல்லப்பட்டிருக்கிறது(யோவா.1:1,2) பிறகு, கர்த்தருடைய வார்த்தைகளை எழுவதில் பரிசுத்த ஆவியானவர், அப்போஸ்தலர்களையும், மற்றவர்களையும் வழிநடத்தினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (2தீமோ.3:16,17, 2பேது.1:21) இதையே வேறு வகையாகச் சொன்னால் கர்த்தர் நாம் அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளும்படியாக, அவைகளை வேதாகமத்தின் பக்கங்களில் கொடுத்திருக்கிறார், குறிப்பாக இன்றைக்கு நமக்கும் பொருந்தக் கூடியதாக உள்ள புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் கொடுத்துள்ளார்.

சபையானது, எருசலேமில், ஸ்தாபிக்கப்பட்டதற்கு பிறகு அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்டுகுதலிலும், ஜெபம் பண்ணுதலிலும்உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்.2:42) என வாசிக்கிறோம். அப்போஸ்தலருடைய உபதேசம் என்பது என்ன? அது கர்த்தரிடத்திலிருந்து வந்தது. சீஷர்கள் அவைகளைத் தொடர்ந்து பின்பற்றினர். அதாவது, அவர்கள் தங்களுக்குப் போதிக்கப்பட்ட காரியங்களைத் தொடர்ந்து செய்தனர். அது என்ன? ஐக்கியமாயிருத்தால், அப்பம் பிட்குதல், ஜெபம் பண்ணுதல்.

ஆரோக்கியமான உபதேசம் பற்றி பவுல் பல சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறார். உலக காரியங்கள், ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரானது என்று சொல்லியுள்ளார்(1தீமோ1:10) வேறொரு சமயத்தில் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாத சமயம் வரும் என்கிறார் (2தீமோ.4:3). மூப்பர்களுடைய தகுதிகளைப் பற்றி பேசும்போது, பவுல் " ..... ***குற்றம் சாட்டப்படாதவனும்,தன்இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானப் பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும்அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்தபுத்தியுள்ளவனும்நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும்,ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக்கண்டனம்பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்***".(தீத்.1:7-9) என்று சொல்லியுள்ளார். மீண்டுமாக "***நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு. முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும், அன்பிலும், பொறுமையிலும், ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி புத்திசொல்லு***" (தீத்.2:1,2) என்கிறார். இங்கே, கவனித்தால் விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் விசுவாசத்தில் ஆரோக்கியமாக இருப்பதற்கு விசுவாசம்தேவனுடைய வார்த்தையை கேட்பதன் மூலம் வருகிறபடியால் (ரோம.10:17) ஒருவன் ஆரோக்கியமான உபதேசம் அல்லது வெளியாக்கப்பட்டுள்ள தேவசித்தத்தைக் கேட்கவேண்டும். மேலும், (தீத்து2:7,8) வசனங்களில் இவ்விதம் கூறுகிறார். **"நீயோ எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாக காண்பித்து, எதிரியானவன், உங்களை குறித்து பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல், வெட்கப்படதக்கதாக உபதேசத்திலே விகற்பமில்லாதவனும் நல்லொழுக்கமுள்ளவனும், குற்றம் பிரிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தை பேசுகிறவனுமாயிருப்பாயாக."**

இப்பொழுது மேலே பார்த்த எல்லா வசனங்களிலும் நாம் ஆரோக்கியமான உபதேசம், உண்மையுள்ள வார்த்தை, விசுவாசத்தில் ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியமான பேச்சு போன்ற வார்த்தைகள் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இப்படி சொல்லுவது பரிசுத்த ஆவியானவர்க்கு ஏன் அவசியமாயிருந்தது? காரணம்என்னவெனில்கர்த்தருடைய உபதேசம் முதலில் கொடுக்கப்பட்டபடியே, சுத்தமாகவும்,உண்மையாகவும் காக்கப்படும்படிதான் மற்றும் கள்ளப்போதகங்களிலிருந்து காப்பாற்றபடு டியாகவும், ஆரோக்கியமான உபதேசம் பற்றி வலியுறுத்தவேண்டிய அவசியமாயிருந்தது. அப்போஸ்தலன் பவுல் மேலும் தொடர்ந்து **அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய் பிரிவினைகளையும், இடறல்களையும், உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலக**

*வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்* (ரோமர்16:17,18)என்று கூறுகிறார்.

இளம்பிரசங்கியாகிய தீமோத்தேயுவுக்கு, அப்போஸ்தலன் பவுல் இப்படியாக கூறுகிறார் *"ஆதாலால் என் குமாரனே,நீ கிறிஸ்து இயேசுவில் உள்ள கிருபையில் பயப்படு. அநேக காட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி"* (2தீமே.1:2) தொடர்ந்து அவர் *"நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயத்தீர்க்கபோகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய இராஜ்யத்தையும் சாட்சியாக வைத்து கட்டளையிடுகிறதாவது சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம்பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி கடிந்துகொண்டு, புத்திசொல்லு. ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்கு திரளாய்ச் சேர்த்துக்கொண்டு சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகும் காலம் வரும்"*. என்கிறார் (2தீமோத்.4:1-4) பேதுருவும் ஒருவன் போதித்தால்தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்க கடவன் ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன். எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக அவருக்கே மகிமையும், வல்லமையும், சாதகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென் (1 பேதுரு 4:11) என்று கூறியுள்ளார்.

மேலுள்ள வசனங்களின் பின்னணியை நாம் கவனித்தால் அவைகள் சத்தியத்தின் முக்கியதுவத்தையும் ஆரோக்கியமான மற்றும் உண்மையான உபதேசங்களின் அவசியத்தையும் காட்டுகிறது. நீங்கள் இருக்குமிடத்தில் ஒரு பிராந்திய சபையை ஆரம்பிப்பதாக இருந்தால் அது தேவனுடைய வார்த்தைகளின் போதனையின்படிதான் செய்யப்படவேண்டுமென்று நான் உங்களுக்கு சொல்லுகிறேன். தேவனுடைய முழுசித்தம் போதிக்கப்பட்டு தங்களை கீழ்ப்படித்தினவர்களை மாத்திரம் உங்களது ஐக்கியத்தில் ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் தேவனில் விசுவாசம் கொள்ளுகிறவர்களாகவும் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பினவர்களாகவும் கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டவர்களாகவும் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்பெற்றவர்களாகவும் இருப்பர்(மாற்.16:15,16 ரோம.10:10, அப்.2:38).

அப்போஸ்தலர் நடப்படிகள் புத்தகத்தை படித்தால் மனமாற்றப்பட்டவர்களின் பல உதாரணங்கள் அங்கே பட்டியிலிடப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லோருமே இந்த உபதேச சத்தயத்திற்கு கீழ்ப்படிந்துள்ளனர் அதன் பலனாக, கர்த்தர் அவர்களை இரட்சித்து தமது சபையில் சேர்த்துகொண்டார். *(அப்.2:47)* யோவான் *3:3-5* வசனங்கள் மறுபிறப்பை குறித்து படம்பிடித்து காட்டுகிறது. ரோமர்*6:3,4* மற்றும் *1* கொரி.*12: 13* வசனங்களில் ஒருவன் இந்தக் கட்டளைக்களுக்கு கீழ்படியும்போது கிறிஸ்துவிலும் அவருடைய சபையிலும் பிரவேசிக்கிறான் என்று போதிக்கப்படுகிறோம்.

பிறகு, பிராந்திய சபையானது இரட்சிப்பின் திட்டம் குறித்து உபதேசிக்கும் அதுமாத்திரமல்ல, ஒரே சபைதான் உண்டு என்றும், கிறிஸ்து அதைக் கட்டினார் என்றும், இயேசு அதன் தலைவர் என்றும், கிறிஸ்துவின் மீது அது கட்டப்பட்டிருக்கிறது என்றும், கிறிஸ்துவின் நாமத்தை அல்லது பெயரை அது தரித்திருக்கிறது என்றும், கிறிஸ்து அதற்காக மரித்தார் என்றும், அவர்தான் அதன் இரட்சகர் என்றும்அந்தச் சபைக்காக மீண்டும் ஒருநாளில் அவர் வருவார் என்றும் சபையானது போதிக்கும். *(மத்.16:15,16, எபே.4:4-6,மத்.16:18, கொலோ.1:8, 1கொரி.3:11, ரோமர்16:16, அப்.20:28, எபே.5:23-27)* இங்கே நான் கொடுத்திருக்கிற வசனங்களின் அதிகாரப்படி, மேற்சொன்ன கருத்தை வெளிப்படுத்தினேன்.

பிராந்திய சபையானது, வசனங்களின் மூலமான மாதிரியை, வாரத்தின் முதல் நாளில் கூடிப் பாடுவதற்கும், ஜெபிப்பதற்கும், வேதம் வாசிப்பதற்கும், கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுவதற்கும், கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ளதின்படி அவருக்குக் கொடுப்பதற்கும் பின்பற்றும். *(அப்.20:7,எபே.5:19, தீத். 2:15, 1 கொரி.11:23-29, 1கொரி.16:2)*. பிராந்திய சபை, தன்னுடைய அங்கத்தினர்களை பரிசுத்தமாக, தேவப்பக்திக்கேதுவான வாழ்க்கை வாழ்வதற்கு ஊக்கப்படுத்தவேண்டும் அப்போஸ்தலன் பவுல், *"ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும், லௌகிக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்தில் ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும்,நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையுள்ள பிரசன்னமாகுதலுக்கும், எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறபடி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மை சகல அக்கிரமகளினின்று மீட்டுக்கொண்டு, தமக்கு உரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியம் உள்ளவர்களாகவும், நம்மைச் சுத்தகரிக்கும்படி நமக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். இவைகளை நீ பேசி, போதித்து,சகல அதிகாரத்தோடும் கடிந்து கொள். ஒருவனும் உன்னை அசட்டை பண்ண இடங்கொடதிருப்பாயாக."* *(தீத்2:11-15)* கூறுகிறார்.

பிராந்திய சபையானது வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே பேசவும், எங்கே மௌனமாக இருக்கிறதோ அங்கே மௌனமாக இருக்கவும் முயற்சிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையோடு கூட்டவோ அல்லது குறைப்தோ அல்லது மாற்று செய்வதோ இல்லாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். *(வெளி.22:18,19, கலா.1:6-9)*

கர்த்தருடைய உபதேசம் மற்றும் கொள்கைகளை சுத்தமாக காத்துக்கொள்வதற்கு உள்ள ஒரு சிறந்த வழி யாதெனில் ஒவ்வொரு அங்கத்தினரும் தேவனுடைய வார்த்தையை வாசித்து அதில் பரிட்சையம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். *(2தீமோ.2:15)* அப்படிச் செய்யும்போது தேவன் அவர்களிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை மாத்திரம் அவர்கள் தெரிந்துகொள்ளாமல் கள்ளப்போதகங்களுக்கு எதிராக தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். சத்தியம் தான் விடுதலையாக்கும் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். *(யோவா.8:32)*

J.C.CHOATE

**J.C. சோட்**

---



## உங்கள் கவனத்திற்கு

அதிகத் தரமுள்ள பல வண்ணத் தாள்களைக் கொண்டு நேர்த்தியான அளவுகளில் வடிவமைக்கப்பட்டு,சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு, எடுப்பான தோற்றம் கொண்ட சுவிசேஷக் கைப்பிரதிகள் ***(Gospel Tracts)*** உங்கள் உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது. **மிகக் குறைந்த விலை.** தேவைக்கு முந்துங்கள்!

## தலைப்புகள்

1. **உன்னை நீயே எண்ணிப்பார்**
2. **கண் இல்லாதவன் கண்டு கொண்டான்**
3. **மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?**
4. **இன்றைக்கு நீங்கள் மரிக்க நேர்ந்தால்...**
5. **ஞானஸ்நானம்**
6. **யார் கிறிஸ்தவன்?**
7. **ஆராதனை**
8. **சபை என்பதுஎன்ன?**

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி*

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*

*தபால் பெட்டி எண் 27,*

***காங்கயம்*** - 638 701. இந்தியா

✆ 04257 20030



பெண்கள் பகுதி

# அக்சாள்

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திர யாத்திரையை முடித்து கானான் தேசத்தை, சுதந்தரித்துக் கொள்வதற்கு முன்பாக அத்தேசத்தை வேவுபார்த்து வந்து நல்ல பதிலை கூறியவர்கள் யோசுவாவும், காலேபும் தான். காலேப் மிகவும் மன உறுதியுள்ளவன். வேதாகமம் அவனைப்பற்றிக் கூறும்போது, ***"என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும் உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன். அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்"*** (எண்.14:24) என்கிறது. தேவனை உத்தமமாய் பின்பற்றின காலேபுக்கு அக்சாள் என்று ஒரு மகள் இருந்தாள். அவளை **ஒத்னியேல்** என்பவனுக்கு திருமணம் முடித்துக் கொடுத்திருந்தான் காலேப். இஸ்ரவேலில் நியாயாதிபதிகளின் பட்டியலில் ஒத்னியேல் முதல் நிற்கிறான்.

திருமணம் முடிந்து தன் கணவன் வீட்டிற்குப் போகும் முன் அக்சாளுக்கு வெகுமதியாக காலேப் நிலங்களை கொடுத்திருந்தான். அவள் புறப்படும்பொழுது தன் தகப்பனிடத்தில் மீண்டும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று எண்ணுகிறாள். இச்சம்பவம் நியாயாதிபதிகளின் புத்தகம் முதலாம் அதிகாரம் 14,15 ஆகிய வசனப்பகுதிகளில் காணப்படுகிறது. *"அவள் புறப்படுகையில், என் தகப்பனிடத்தில் ஒரு வயல் வெளியை கேட்க வேண்டுமென்று அவனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கழுதையின் மேலிருந்து இறங்கினாள். காலேப் அவளை நோக்கி: உனக்கு என்ன வேண்டும் என்றாள். அப்பொழுது அவள்: எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும். வறட்சியான நிலத்தை எனக்கு தந்தீர். நீர்ப்பாய்ச்சாலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள். அப்பொழுது காலேப்: மேற்ப் புறத்திலும், கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தான்."*

மேற்க் கண்ட சம்பவத்திலிருந்து அக்சாள் மூலமாக நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

## அக்சாள் தன்னைத் தாழ்த்தினாள்

தன் தகப்பனிடம் ஆசீர்வாதத்தைப் பெற நினைத்தாள். ஆனால் கழுதையின் மேல் அமர்ந்தவாறே கேட்க விரும்பவில்லை. நான் விரும்பியதைப் பெற்றுக் கொள்ள முதலாவது, தன்னுடைய நிலையிருந்து இறங்கி, தன்னைத் தாழ்த்த வேண்டியிருந்தது.

கிறிஸ்துவுக்குள் அன்புச் சகோதரிகளே! இதைப் படிக்கும் நாமும் கூட நாம் இருக்கும் நிலையிலிருந்து இறங்க வேண்டும். இறங்க வேண்டுமென்பது நம்மை தாழ்த்த வேண்டும் என்பதைக் குறிக்கிறது. நாம் எல்லாம் காரியங்களுக்காகவும் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவண்டை போக வேண்டியுள்ளது. அவர் மூலமாய் நாம் பிதாவிடம் வேண்டிக் கொள்வதை நமக்குக் கொடுப்பார். இங்கு அக்சாள் கிழே இறங்கி தன்னைத் தாழ்த்துகிறாள். தேவனுடைய கண்களில் கிருபையும், தயவும், இரக்கமும் நன்மையும் கிடைக்கவேண்டுமானால் நாம் நம்மை தாழ்த்த வேண்டும். அநேக சமயங்களில் நாம் நம் மனதை மிகவும் கடினப்படுத்திக் கொள்கிறோம். தேவனுடைய வசனம் நம்மை எச்சரிக்கும்போது, இப்படிதான் செய்யவேண்டும் என்று கூறும்போது நம்முடைய உள்ளத்தை திறந்து அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். வசனத்திற்கு எதிர்த்து செயல்படுகிறோம். உலகம், ஆசை, பாரம்பரியம் போன்ற காரியங்கள் இன்று அநேகருடைய இருதயங்களில் குடிகொண்டிருக்கிறபடியால் தங்களை தாழ்மைப்படுத்தி வசனங்களை ஏற்றுக் கொள்வதில்லை. இவைகளை விட்டு இறங்கி, வாடாத ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ள நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை வசனத்தில் தேடிப்பார்க்க வேண்டும். வசனம் தான் நம்மை கடைசி நாளில் நியாயந்தீர்க்கப் போகிறது *(யோ.12:48)* ஆகவே தேவனிடத்திலிருந்து இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் தாங்கள் இருக்கிற, தாங்கள் கடைப்பிடித்த மனிதக் கோட்பாடுகளிலிருந்து விலகி, தங்களைத் தாழ்த்தி வசனத்திற்கு செவிமடுக்க வேண்டும்.

## அக்சாள் விண்ணப்பம் செய்தாள் :-

விண்ணப்பம் என்பது கெஞ்சிக் கேட்பது. தன் தகப்பனிடத்தில் ***எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும்*** என்று சொல்லி கெஞ்சிக்கேட்கிறாள். வறட்சியான நிலத்தைத் தந்தீர். நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்.

இன்று அநேகருடைய வாழ்க்கையைப் பார்ப்போமானால் வறட்சியான நிலை காணப்படுகிறது. பிரயோஜனமற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டுள்ளார்கள். தனக்கும், தன் குடும்பத்திற்கும் எந்த ஒரு நன்மையும் ஈட்டாமல் வறண்டு போன ஜீவியத்தை மேற்கொண்டுள்ளனர். ஆவிக்குரிய வாழ்க்கையிலும், சரீர வாழ்க்கையிலும் வறட்சி. நீர்ப்பாய்ச்சலான நிலங்களைப் போன்று வளமையான வாழ்வு கிடைக்க வேண்டுமானால் தேவனிடம் போய்க் கெஞ்சி ஜெபிக்க வேண்டும். தாசனாகிய மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்காக தேவனிடம் மன்றாடும்போது கெஞ்சிப் பிரார்த்தித்தான். இன்று அநேகர் விண்ணப்பம் செய்யாமலே தாங்கள் ஆசீர்வாதமாக வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இங்கு அக்சாள் விண்ணப்பம் செய்கிறாள்.அதைப்போல் நாமும் தேவனிடம் எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும் என்று விண்ணப்பம் செய்வோம்.

## அக்சாள் பெற்றுக்கொண்டாள்:

தன் மகள் உரிமையோடு தன்னிடம் விண்ணப்பித்ததைக் கேட்ட தகப்பனாகிய காலேப் அவளுக்கு மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தார். கேட்டதைவிட அதிகமாகப் பெற்றுக் கொண்டாள்.

இங்கு ஜெபத்தின் மூலமாக கிடைக்கும் நன்மைகளை கவனித்தோம். வேதாகமத்தில் நிறைய வாக்குத்தத்தங்கள் நிரம்பி இருக்கிறது. அவைகளைப் பற்றி "*.... மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தம்*" **(1பேதுரு.1:4)** என்று பார்க்கிறோம். இவ்வளவு சிறப்பான வாக்குத்தத்தங்கள் நம்முடைய வாழ்க்கையில் நாம் பெற்று அனுபவிக்க வேண்டுமென்றால் நாம் அவருடைய சொந்தப் பிள்ளைகளாய் மாற வேண்டும். அவருடைய பிள்ளைகளாய் மாறவேண்டுமென்றால் வேதாகமம் சொல்லுகிறபடி செய்யவேண்டும். வசனத்தை கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து பின்பு ஞானஸ்நானத்தின் மூலமாக அவருக்கு கீழ்ப்படிந்தால் அவர்களுடைய் பிள்ளைகளாய் மாறுவோம். அப்பொழுது பரலோக பாக்கியம் என்ற ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள முடியும். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல கர்த்தர் தமக்கு பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.

ஆகவே பிரியமானவர்களே, இந்த அக்சாள் நமக்கு மூன்று பாடங்களை கற்றுக் கொடுத்திருக்கிறாள். இவளைப் போல நம்மைதாழ்மைப்படுத்தி, விண்ணப்பித்து, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், சரீரப்பிரகாரம ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வோம்.

**ரேச்சல் இராஜநாயகம்.**

### இயேசு கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

(ரோமர் 5ம் அதிகாரத்திலிருந்து....)

1. தேவனிடத்தில் சமாதானம் (வசனம்.1)
2. கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியம், (வசனம்.2)
3. தேவ மகிமையின் நம்பிக்கையில் மேன்மைபாராட்டல்( வசனம்.2)
4. உபத்திரவத்திலும் களிகூறுதல் (வசனம்.4)
5. உன்னதமான நம்பிக்கை (வசனம்.5)
6. தேவனுடைய அளவற்ற அன்பு (வசனம்.8)
7. தேவனுடன் ஒப்புரவாக்கப்படுதல். (வசனம்10,11)
8. தேவ கோபாக்கினையிலிருந்து விடுதலை(வசனம்.15,16)
9. நித்திய ஜீவன் (வசனம்.17)
10. நீதிமான்களாக்கப்படுதல். (வசனம்.19)

வாலிபர் பகுதி



# கனத்திற்கு பாத்திரவான்கள்

எதிர்பார்ப்புகளை தங்கள் நெஞ்சில் ஏந்தியவண்ணம், வையகத்தில் நம்மை முதன்முதலாய் இன்முகத்தோடும், அளப்பில்லா உவகையோடும் வரவேற்பவர்கள், இன்னல்கள் பல வந்தபோதிலும் இக்குவலயத்திற்கு இக்குழந்தையை அறிமுகப்படுத்துவேன் என எண்ணி தியாகங்கள் பல புரிந்து, பத்து திங்கள் சுமந்து நம்மை ஈன்றெடுக்கும் அன்னையும் தந்தையுமே. இப்புவிக்கு நம்மை அறிமுகப்படுத்துவதோடு நிற்காமல் இவ்வுலகத்தை நமக்கு அறிமுகப்படுத்துபவர்களும் இவர்களே.

தங்களுக்கு புது உறவாய் மலர்ந்த இப்பச்சிளங்குழந்தையை பக்குவமாய் வளர்ப்பது பெற்றோர் மேல் விழுந்த பெரும்பொறுப்பு. அவர்கள் எவ்வளவுதான் பாசமாகவும், பக்குவமாகவும் நம்மை வளர்த்தாலும், நம்முடைய சரியான ஒத்துழைப்பில்லை எனில் அது படுதோல்வியிலேயே முடியும். மகிழ்ச்சியான குடும்பம் அமைவதற்கு கூட்டு முயற்சி மிகவும் தேவையானது என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும். வாலிபர்களுக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும் நீதிமொழிகளில் சாலொமோன் கூறுகையில். ***"என் மகனே உன் தகப்பனின் புத்தியைக் கேள். உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே"*** (நீதி.1:8) என்கிறார். நம்மை பெற்றெடுத்தவர்கள் நாம் சீரழிந்து போவதற்காக எதையும் சிரத்தைஎடுத்து சொல்லமாட்டார்கள் என்பதை தெளிவாய் புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

## பெற்றோர் நம்மிடம் எதிர்பார்ப்பதென்ன?

பரலோகத்தின் தேவன், மனிதன் தனது எதிர்பார்ப்பை அறிந்து அதன்படி நடக்கவேண்டும் என்பதற்காய், தன் தாசனாகிய மோசேயிடம் பத்து கட்டளைகளைக் கொடுத்தார். அதில் ***"உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக"*** (யாத்.20:12) என்ற கட்டளையைக் கொடுத்திருக்கிறார். ஆனால் மற்ற ஒன்பது கட்டளைகளைவிட இக்கட்டளை ஒரு சிறப்பம்சத்தைப் பெற்று நிற்கிறது என்று கூறினால் அது மிகையாகது. ***"உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு"*** என்ற வாக்குத்தத்தத்தை இக்கட்டளையுடன் இணைத்திருக்கிறார். ஆகவே தான் பவுல் அப்போஸ்தலன் இதை வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனை என்கிறார் (எபே.6:13)

நாம் உருவாக தேவனுக்கு அடுத்தபடியாக காரணமாயிருக்கும் பெற்றோரை கனத்திற்கு பாத்திரவான்களாக நீதியுள்ள பிதா எண்ணி அதை எழுதியும் கொடுத்திருக்கிறார். ஆகவே எனக்கருமையானவர்களே! நாம் சிறுபாலகனாயிருக்கும்போது பசித்திருக்கையில், நடுநிசி என்றும் பாராமல், உறக்கம் பாழாகிறதே என்றெண்ணாமல் சீராட்டி, தாலாட்டி வளர்த்தவர்களின் எதிர்ப்பார்ப்பின்படி நடக்க வேண்டும் என்பது நம்மேல் விழுந்த

கடமையாயிருக்கிறது.ஆகவே தான் சாலொமோன் கூறுகையில் ***"......ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்"*** (நீதி.10:1) என்கிறார்.

நம்மை பெற்றெடுத்த கனவான்கள் நமக்கு தரமான கல்வி தாராளமாய்க் கிடைக்க வேண்டுமென்று மனப்பூர்வமாய் நினைப்பது நிச்சயம். இன்றைக்கும் தன் பிள்ளை நல்ல கல்வி நிலையத்தில் படிக்கவேண்டும் என்பதற்காய், அல்பகல்பாராது தங்கள் வேர்வையைக்குருதியாய் நிலத்தில் சிந்தி அயராது பாடுபடும் பெற்றோர்களுண்டு. தங்களுக்கு பகற்கனவாய் போன மேற்படிப்பு தங்கள் பிள்ளையின் வாழ்விலாவது நிகழ்வாகட்டும் என ஏங்கித்தவிப்பார்கள் இப்பெற்றோர்கள். நாம் அவர்களது ஆவலறிந்து நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கடமையை சரியாய் செய்யவேண்டும். அவர்கள் இரத்தம் சிந்தி சம்பாத்தியம் செய்யும் செல்வமும் பணமும், அவர்களுடைய இரத்தமாகிய செல்வங்களால் வீணாகலாமா வாலிபர்களே! சிந்தியுங்கள்.

ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளின் வாலிப்பருவம் மகிழ்ச்சியாக இருக்கவேண்மென்றே எண்ணுவார்கள். ஆனால் சிலவேளை நம்மேல்அவர்கள் கடுமையாய் நடந்துகொள்வது போல் தோன்றும், நமக்கு மகிழ்வாய் தோன்றும் காரியங்களை செய்ய அனுமதி மறுப்பார்கள். வாலிபர்கள் உடனே என் பெற்றோர் என்னை மகிழ்ச்சியாய் இருக்கவிடுவதில்லை என்றே எண்ண வாய்ப்புண்டு. ஆனால் நண்பனே உண்மை என்னவென்றால் நம்முடைய அனுபவமின்மையால் நமக்கு புலப்படாத புதைகுழிகளும் வழுக்குப் பாறைகளும் அக்காரியங்களில் ஒளிந்திருப்பதை தங்கள் அனுபவக்கண்களால் பார்ப்பதால்தான் அப்படிப்பட்டவைகளைச் செய்ய அனுமதிப்பதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளல்வேண்டும். நம் தந்தையின் புத்திமதியும், தாயின் போதகமும் நம் சிரசுக்கு அலங்காரமான முடியும், நம் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருப்பதாக (நீதி.1:9)

எந்தப் பெற்றோரும் தன் பிள்ளை, சரீரத்திலும், மனவளர்ச்சியிலும், ஆவிக்குரிய வாழ்விலும் வலிமை பெற்று வாழவேண்டும் என்றே நினைப்பர். நாம் முழுமைபெற்ற வளர்ச்சியடைய ஆரோக்கியமான தேகமும், இவ்வுலக அறிவும் பெற்றிருந்தால் மாத்திரம்போதாது. நாம் ஒழுக்க ரீதியாகவும் மற்றும் ஆவிக்குரிய காரியங்களிலும் வளர வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தன் பிள்ளை தேவனிடத்தில் நற்பெயர் பெற வேண்டும் என எதிர்நோக்குவர். அதைப்புரிந்து வாலிப்பிராயத்திலே வாழும் நாம், தீங்கு நாட்கள் வரும் முன் மனந்திரும்பி, தேவன் மீது விசுவாசம் வைத்தவர்களாய் அவருக்குத் திருமுழுக்கில் கீழ்ப்படிந்தால் அவர் நம் பாவங்களை இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போல் வெண்மையாக்குவார் என்றறிந்து அதற்கு செவிசாய்த்து கீழ்ப்படிய வேண்டும் *(அப்.2:38, ஏசா.1:18)*

## பெற்றோரிடம் அளவுக்கதிகம் எதிர்பார்க்காதீர்கள்

தரணியிலே பெற்றோரைப் போல் நம்மிடம் அன்புசெலுத்துவதற்கு ஒருவருமில்லை. அவர்கள் நம்மை உண்மையாய் நேசிக்கிறதினால் நாம் தவறு செய்கையில் கண்டிக்கிறார்கள், சிலவேளை தண்டிக்கிறார்கள். நாம் மீண்டும்,

மீண்டும் தவறுகள் செய்து வீணாகிவிடக்கூடாது என்பதிலும், நம் வாழ்வில் தீய பழக்கவழக்கங்கள் புகுந்துவிட்டால், அதுவும் இந்த இளமைப் பருவத்தில் புகுந்துவிட்டால், அதை திருத்துவது மிக கடினமானது என்றறிந்ததாலும், நம் மீதுள்ள கரிசணையான அன்பிற்கு அடையாளமாய் நம்மை நல்வழிப்படுத்துவற்காகவே இப்படி கண்டிக்கவும், தண்டிக்கவும் செய்கிறார்கள் **"தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனை சிட்சிக்கிறதுபோல...."** *(நீதி.3:12)* என்று ஞானி இக்கருத்துக்கு மேலும் வலுசேர்க்கிறார்.

எந்த நேரத்திலானாலும் சரி, தண்டனை என்பது வேதனையானதாகவே திகழும், அதுவும் நம்மில் அன்பாயிருக்கிறவர்கள் தண்டித்தால் அது சிறு குழந்தையின் பிஞ்சு மேனியில் தேனீ கொட்டியதைப் போல் நமக்கு வலிக்கும். ஆனாலும் அத்தண்டனை தன் பலனைத் தரும் போது தேனைப்போல் தித்திக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்கமுடியாது. எபிரெய எழுத்தாளர் ***"எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க்காணும் ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்தரும்"*** என்று ஆவியானவர் துணைக்கொண்டு எழுதுகிறார் (எபி.12:11). போதகத்தையும், ஒழுக்க ரீதியான கட்டுப்பாட்டையும் வெறுத்தவர்கள் தங்கள் வாழ்க்கையின் அந்திய காலத்தில், ஐயகோ! நல்வழியை மறந்தேனே, நல்லோர் சொல் கேளாமல் போனேனே என்று அங்கலாய்ப்பதுண்டு. ஆகவே எனக்கருமையான நண்பனே, முதியோரின் அறிவுரையும் கண்டிப்பும், முதிர்ந்த நெல்லிக்கனிபோல் முன்பு கசந்தாலும் பின்பு இனிக்கும் என உணர்ந்து, நம் பெற்றோர்கள் நம்மை தண்டிக்கக் கூடாது என்றும், என்னை யாரும் கேள்வி கேட்கக்கூடாது என்றும் எதிர்பார்க்காதீர்கள்.

குடும்பத்தில் அவ்வப்பொது நம் உறவுகளுடன் கருத்து வேறுபாடு வருவது இயல்புதான், ஆனால் அப்படி வரும்போது அதை பெரிதாக்கிவிடாமல் தடுப்பது சாலச்சிறந்தது. ஞானக்களஞ்சியமான நீதிமொழிகளில் ***"சண்டையின் ஆரம்பம் மதகைத் திறந்துவிடுகிறதுபோலிருக்கும், ஆதலால் விவாதம் எழும்முன் அதை விட்டுவிடு"*** என்கிறார்.(நீதி.17:14) மடைதிறந்த வெள்ளமாய் வாக்குவாதம் பெருக்கெடுத்து வரும் முன் அதை அணையிட்டுத் தடுத்து, சினத்தினால் நமக்கும், பிறருக்கும் ஏற்படும் சேதங்களைத் தவிர்ப்போம். நாம் இந்த கருத்து வேற்றுமையால் யாரின் உணர்வுகளையாவது மதியாமல் மதியற்றவர்களாய் நடந்து அவர்தம் உள்ளத்தைக் காயப்படுத்தினது உண்டானால், அவர்களும், நமக்கு அப்படி செய்தார்களே முதலில் அவர்கள் நம்மை மன்னித்து, வந்து பேசட்டுமே என எதிர்ப்பார்க்காமல், பரமப்பிதா நம் தவறுகளை மன்னிக்கவேண்டும் என்று எண்ணுகிற நாம் முதலில் அவர்களை மன்னிப்போம்*(மத்.6:14)*

நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு காரியங்களையும், நம்மை பெற்றோர் பார்த்துக்கொள்ளட்டும் என்று பொறுப்புணராமல், இஷ்டம்போல் நடந்துகொண்டு, நம் சுமையையும் அவர்கள் மேல் ஏற்றி வைத்து இதையும் சேர்த்து சோர்ந்துபோகாமல் சுமப்பார்கள் என எதிர்ப்பார்க்கக் கூடாது. மாறாக அவர்களுடன் தோளோடு தோள் கொடுத்து உறுதுணையாய் காரியங்கள் ஆற்றி அவர்களது பணியை எளிதாக்கும்போது மனங்குளிர்ந்து நம் காரியங்களிலும் முனைப்புடன் அவர்கள் செயல்படுவார்கள் என்பது நிச்சயம். ஆதியிலே மனிதனை படைத்தத் முடித்தபின் அது மிக நல்லது என்று தேவன் கண்டது போல, நம் நன்நடத்தைக் கண்டு, இவனைப்/இவளைப் பெற்றது மிகநல்லது என நம் பெற்றோர்கள் உள்ளத்தின் ஆழத்தில் நினைக்கும் படிக்கு தேவன் சொன்ன கட்டளையான ***"உன் தகப்பனையும் தாயையும் கனப்படுத்துவாயாக"*** என்பதை கைக்கொண்டு நம் வாழ்வில் இம்மைக்குரிய பெற்றோரிடமும், மறுமைக்குரிய தகப்பனிடமும் பேராசீர்வாதம் பெறுவோமாக!

**ஜே. பிக்கின்ஸ்**

# வெளிப்படுத்தின விசேஷம்

வெளிப்படுத்தின விசேஷம் இரண்டாம் அதிகாரத்தில் உள்ள இரண்டாம் நிருபம் சிமிர்னா சபைக்கு எழுதப்பட்டுள்ளது. வசனம்,8-ல் இயேசு தன்னை முந்தினவரும், பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் என்று சிமிர்னா சபைக்கு விவரிக்கிறார். இயேசு, தன்னை நித்தியமானவர் என்று நினைவுபடுத்துகிறார். அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையவது. *(மீகா.5:2)* ஆதியிலிருந்து தேவனிடத்தில் இருந்தவர். *(ஆதி.1:26, யோவா.1:1-3)*. அவர் என்றைக்கும் வாழ்ந்து பரலோகத்தில் என்றென்றும் ஆளுகை செய்வார். *(எபி.1:8, வெளி.11:15)*. அந்த வகையில், அவர் முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிறார். இன்னும், நீதியினிமித்தம் தான் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, மரித்தேன் என்றும், ஆனால், உயிரோடே எழுந்து ஜீவிக்கிறேன் என்றும் நினைவு படுத்துகிறார். இது அவர் நித்திய காலம் முழுவதும் வாழ்ந்து, ஆளுகை செய்வார் என்ற உண்மையோடு பிணைக்கப்பட்டுள்ளது. இந்த நிருபத்தில், கிறிஸ்து தன்னை இந்தவிதமாக அறிமுகப்படுத்துவது 9 மற்றும் 10 வசனங்களில் அவர் என்ன சொல்லுகிறார் என்பதற்கு நேரிடையாகப் பொருந்தக் கூடியதாக உள்ளது. கிறிஸ்துவைப் போலவே சிமிர்னா சபையில் இருந்த கிறிஸ்தவர்களும், நீதியினிமித்தம் பாடுகள் பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர், இயேசுவைப் போலவே சீக்கிரத்தில் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படப் போகிறவர்களாக இருந்தார்கள் ஆனால், இயேசு, நீங்கள் பயப்பட வேண்டாம் என்று சொல்லுகிறார். ஏனெனில், மரணபரியந்தம் உண்மையாயிருந்தால் ஜீவகிரிடம் அவர்களுக்குக் கொடுக்கப்படும். ஜீவகிரீடம் (பரலோகம்) என்ற வாக்குத்தத்தமும், இரண்டாம் மரணத்திற்குத் (நரகம்) தப்பிக்கொள்ளலாம் என்ற வாக்குத்தத்தமும், மனிதன் நமக்கு என்ன செய்தாலும் நாம் பயப்படக்கூடாது என்பதற்குக் காரணங்களாக உள்ளன. *(மத்.10:28, எபி.13:5-6)*. தேவன், இயேசுவை, என்றென்றைக்கும் ஜீவிக்கும்படி மரணத்திலிருந்து எழுப்பியது போலவே நாமும் என்றென்றும் வாழும்படியாக எழுப்பப்படுவோம். இயேசுக்கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்தான், பரலோகத்தில் நித்திய வாழ்வு என்ற நமது நம்பிக்கைக்கு அடிப்படையாக உள்ளது. *(1.பேதுரு.1:3-5)* பாடுகள் படுகின்ற கிறிஸ்தவனுக்கு இது எவ்வளவு உற்சாக மூட்டும் வார்த்தைகள் வெளிப்படுத்தல் நூலைப்படிப்பதற்கு நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதற்கு இது இன்னுமோர் உதாரணம்.

ஆசியாவிலுள்ள மற்ற 6 சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களில் காணப்படும் பொதுவான அம்சம் சிமிர்னா சபை நிருபத்தில் உண்டு.

வசனம்-9ல் இயேசு *நான் உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்* என்று சொல்லுகிறார். ஆனால் ஏதாவது காரணத்திற்காக கடிந்து கொள்ளப்பட்ட இரண்டு சபைகளில் (மற்றொன்று பிலதெல்பியா) சிமிர்னாவும் ஒன்று. ஒவ்வொருவருடைய கிரியைகளையும் அறிந்திருப்பது போலவே, இயேசு, அவர்களின் கிரியைகளையும் அறிந்திருந்தார். ஆனால் அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்களென்ற நற்காரியங்கள் மட்டுமே இயேசுவிடம் இருந்தது. அவர்களின் உபத்திரவத்திற்காகவும், ஆவிக்குரிய ஐசுவரியத்திற்காகவும் இயேசு அவர்களை மெச்சிக்கொண்டார். சிமிர்னாவிலிருந்த சபை நமக்கு ஒரு மிகச்சிறந்த உதாரணம். அவர்கள் சரீரப்பிரகாரமாகக் குறைவுள்ளவர்களாகவும், ஆவிக்குரிய ரீதியில் ஐசுவரியவான்களாகவும் இருந்தார்கள். இது ஒரு பிராந்திய சபையானது, தேவனுக்குப் பயனுள்ளதாக இருக்க, அதிகப்பணம் உடையதாயிருக்கத் தேவையில்லையென்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இதற்கு நேர்மாறாக, லவோதிக்கேயாவிலிருந்து சபையானது சரீரப்பிரகாரமாக ஐசுவரியமுள்ளதாயிருந்தும் ஆவிக்குரிய ரீதியில் நிர்ப்பாக்கியமுள்ளதாகவும், பரிதபிக்கப்படத்தக்கதாகவும், தரித்திரமும், குருடும், நிர்வாணியுமாக இருந்தது. (வெளி.3:17). அப்போஸ்தலன் பவுல், மக்கெதோனியாவிலிருந்தசபைகள், கொடிய தரித்திரமுடையவகளாயிருந்தும் தங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தவர்களாயிருந்தார்களென்று சாட்சி கொடுக்கிறார். (2.கொரி.8:1-5). அதைப்போலவே சிமிர்னாவில் இருந்த சபையானது, சரீரப்பிரகாரமாக தரித்திரம் உடையதாகவும் ஆவிக்குரிய ரீதியில் ஐசுவரியம் உடையதாயிருந்தது. கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெறுவதற்கு இந்த சபையானது ஒரு நல்ல உதாரணமாக உள்ளது. பாடுகளில் இரண்டு வகை உண்டு. ஒருவகை, நாம் நமது சொந்தத் தவறுகளினிமித்தமாகப் பாடநுவிப்பது. (1.பேதுரு. 2:20,3:17,4:15). அடுத்தவகை, நன்மை செய்து, கர்த்தருக்குக் கீழ்ப்படிவதினிமித்தம் பாடநுவிப்பது, (1பேதுரு.2:19,20) கிறிஸ்துவின் பாடுகள் இவ்வகையைச் சார்ந்ததே. (1பேதுரு.4:12-16, 2கொரி.1:5). கிறிஸ்துவானவர் எந்த தவறும் செய்யவில்லை. ஆன்ால் சிலுவையில் மரிக்குமளவிற்கு அவர் பாடுபட்டார். (1.பேதுரு.2:21-25,3:17-18) நீதியினிமித்தம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாம் பாடுப்டுவதற்காக நமக்கு ஒரு நல்ல முன்மாதிரியை அவர் விட்டுச் சென்றுள்ளார். கிறிஸ்துவின் சாயலில் தவறுகளினிமித்தமாகப் பாடநுவிப்பது.நாம் பூரணப்படுவதற்கு ஆவிக்குரிய ரீதியில் இந்த விதமாகவே வளருகிறோம். (யாக்.1:2-4,1.பேதுரு.1:6-7, 5:10, எபி.2:10, எபி.5:3-4) இந்த வகையான உபத்திரவ்த்தைத் தான், சிமிர்னா சபையானதுயூதர்களாலும், மற்றவர்களாலும்அநுபவித்தது. (வெளி.2:9-10).ஆனால்,இந்த வகையில் தான்அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் ஐசுவரியமுடையவர்களாகவும், கறைதிரையற்றவர்களாகவும், கடிந்து கொள்வதற்கு அவசியமில்லாதவர்களாகவும் ஆக முடிந்தது. (1.தீமோ.6:14). ஆகவே, அவர்கள் மனந்திரும்புவதற்கென்று ஏதும் இருக்கவில்லை. அவர்கள் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டதெல்லாம் பாராட்டும், மரணபரியந்தம் உண்மையாயிருக்க வேண்டுமென்ற உற்சாகமும் தான்.

இதே ஒன்பதாம் வசனத்தில் நாம் கவனிக்க வேண்டிய மற்றுமொரு காரியம், கர்த்தர் சரீரப் பிரகாரமான யூதர்களையல்ல, ஆவிக்குரிய யூதர்களையே அங்கீகரிக்கிறார் என்பது. (ரோமர்.2:28,29: 9:6-8). உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் தேவனுடைய இஸ்ரவேலர்கள் (கலாத். 6:15-16). உண்மையுள்ள கிறிஸ்தவனாயில்லாத சரீரப் பிரகாரமான யூதர்கள் **சாத்தானுடைய ஜெப ஆலயங்கள்.** வெளிப்படுத்தல் 2,3 அதிகாரங்களின் எல்லா நிருபங்களிலும், ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுவதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றுள்ளது. இந்த நிருபங்களில் போதிக்கப்பட்டிருப்பவைகளிலிருந்து நாம் கற்றுக்கொள்வதற்கு அவசியமான வாக்குத்தத்தம் ஜெயங்கொள்ளுகிறவனுக்குத்தான். அந்த வாக்குத்தத்தங்களெல்லாம், நாம் இரண்டாம் மரணத்தால், சேதப்படுத்துவதில்லையென்பது. இரண்டாம் மரணமென்பது, நரக அக்கினியின் மூலமாக, தேவனிடமிருந்து நித்திய காலமாகப் பிரிக்கப்படுவதாகும். (2.தெச.1:7-10, வெளி.20:14; 21:8). எல்லாச் சோதனைகளையும் நாம் மேற்கொள்வதுதான், நரகத்திற்குத் தப்புவதற்கான வழி.

மூன்றாவது கடிதம் பெர்கமு சபையாருக்கு : பெர்கமு சபையாருக்கு இயேசு தன்னை **இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர்** என்று விவரிக்கிறார். அவர்களுக்குள்ளாக இருக்கிற கள்ள உபதேசத்தை இந்நிருபம் கண்டனம் செய்யும்போது (வெளி.2:14-15), இந்த முன்னுரையானது, கள்ள உபதேசங்களை எதிர்த்து நில்லுங்கள், இல்லாவிட்டால், இயேசு தமது வாயின் பட்டயத்தால் உங்களை எதிர்த்துப் போராடுவார் என்ற எச்சரிப்பாக உள்ளது. (வெளி.2:16). இது கிறிஸ்துவினுடைய வல்லமையையும், அந்த வல்லமையைக் கொண்டு தீமை செய்கிறவர்களைப் பழிவாங்குவார் என்பதையும் விவரிக்கிறது. (2.தெச.2:7-10; வெளி.19: 15). அது மாத்திரமல்ல, இது கள்ள உபதேசம் எவ்வளவு கடுமையானது என்பதையும் காட்டுகிறது.

வசனம். 13-ல் இயேசு அவர்களுடைய கிரியைகளை அறிந்திருந்தார் என்றுள்ளது. தனது நாமத்தை உறுதியாய் பற்றிக்கொண்டிருப்பதற்காகவும், விசுவாசத்தை மறுதலியாமல் இருப்பதற்காகவும் பெர்கமு சபையாரை கர்த்தர் பாராட்டினார். பெர்கமு **சாத்தான் குடிகொண்டிருக்கிற இடம்** என்று அடையாளங் காட்டப்பட்டிருக்கிறபடியால், இச்சபைக்கு அதிகமான விசுவாசமும், தைரியமும் அவசியப்பட்டிருக்கும். இது **சாத்தான் குடிகொண்டிருக்கிற இடம்** என்று சொல்லுவதற்கு காரணம். பெர்கமு மத ரீதியில் ஒரு மையமாக இருந்தது. அங்கு அந்நிய தெய்வங்களுக்கான புகழ்மிக்க கோயில்களோடு ரோமச்சர்க்கரவர்த்தியை ஆராதிப்பதற்கென்று ஒதுக்கப்பட்ட மூன்று பெரிய கோயில்களும் இருந்தது. கண்டிப்பாக, அங்கே சாத்தான் குடியிருந்துள்ளான். இது பெர்கமுவிலிருந்த கொல்லப்பட்டான் என்று இயேசு குறிப்பிடுகிறார். ஆக, பெர்கமு கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்கும்படியான ஒரு நிர்ப்பந்தமும், கிறிஸ்துவினிமித்தம் தங்கள் ஜீவனை இழந்து போகக்கூடிய நிலையும் இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையின் மத்தியிலும், இந்தச் சகோதரர்கள் கிறிஸ்துவின் நாமத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்தனர்.

கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் தங்கள் உயிரை பணயம் வைக்கின்ற அளவிற்கு, பெர்கமு சபையார் விருப்பமுள்ளவர்களாக இருந்திருந்தாலும் கூட, அச்சபையாரின் அனைத்து செயல்பாடுகளும் சிறப்பாக இருக்கவில்லை. வசனங்கள் 14,15 அவர்களிடம் பிலேயாம் மற்றும் நிக்கொலாய் மதஸ்தருடைய போதனைகள் உண்டு என்று கண்டனம் செய்கிறார். மோவாபின் ராஜாவாகிய பாலாக்கினிமித்தம் பிலேயாம் கர்த்தருடைய பிள்ளைகளை சபிக்க மூன்றுதரம் முயற்சித்தான். ஆனால், தேவன் அந்த மூன்றுதரமும் அவைகளை ஆசீர்வாதமாக மாற்றினார். (எண்.22-24அதி). பாலாக்கிடமிருந்து ஒரு பெரும் வெகுமதியை பெற்றுக்கொள்ளும்படியாக, இஸ்ரவேல் சபிக்கபடவேண்டுமென்று பிலேயாம் விரும்பினான். (எண்22:7: நெகே.13:2,2.பேதுரு.2:15). தன்னுடைய வார்த்தையைக் கொண்டு, தான் விரும்பினதை அவன் அப்பொழுது செய்யமுடியாமல், போன படியால், இஸ்ரவேலை சபிப்பதற்கு பிலேயாம் இப்பொழுதுவேறுவகையில் வந்திருக்கிறான் என்பதை வெளி.2:14 -ல் நாம் அறிகிறோம்.


தேவன் விக்கிரக வணக்கம் அல்லது வேசித்த்தனதினிமித்தம் தான் இஸ்ரவேலைச் சபிப்பேன் என்று மோசேயின் பிரமாணத்தில் சொல்லியுள்ளார். (உபா.11:26-28, 27:15,20:23-26). ஆகவே, விக்கிரங்களுக்குப் படைத்ததைப்புசித்து, வேசித்தனம் பண்ணுவதற்கு அவர்களை இணங்கவைக்கும்படியான இடறலை இஸ்ரவேலுக்கு முன்பாகப் போடும்படியாக பிலேயாம் பாலாக்குக்குப் போதித்தான். இந்த முயற்சி வெற்றியடைந்தது. தேவன் இஸ்ரவேலரை சபித்து, வாதையை அவர்கள் மேல் வரப்பண்ணினார். அதன் மூலம், அன்றையதினம் 24 ஆயிரம்பேர் செத்தார்கள். (எண்.25:19).

புதிய ஏற்பாட்டில் இப்பொழுது வேசித்தனம் (1.கொரி.6:9,13-18,1.தெச.4:3). விக்கிரகாராதனை (1கொரி.10:14,1.தெச.1:9,1.யோவா.5:9)ஆகிய இரண்டிற்கும் தடைசெய்யப்பட்டிருக்கிறது. வெளி.2:14ஐ கவனித்தால், பெர்கமு சபை தங்களை விக்கிரக வணக்கத்திற்கும், வேசித்தனத்திற்கும் வழிநடத்தக்கூடிய கள்ளப்போதகர்களை தங்களுக்குள் கொண்டிருந்தார்கள் என்று தெரிகிறது. இந்த கள்ளப்போதகர்கள், பெர்கமு சபையாரை, துன்புறுத்தலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்கு விக்கிரகவணக்கம் செய்வதும், ஒழுக்க கேடான காரியங்களைச் செய்வதும் தவறில்லை என்று ஒப்புக்கொள்ளும்படி முயற்சித்திருக்ககூடும்.வசனம்-15, பெர்கமு சபையில் சிலர், நிக்கொலாய் மதஸ்தரின் கொள்கையைக் கொண்டிருந்தனர் என்று சொல்லுகிறது. அக்கொள்கைகளை இயேசு வெறுத்தார். (2:15). அத்தோடு, அவர்களின் செயல்களையும் (வெளி.2:6),எபேசுவிலும், பெர்கமுவிலும் இவர்கள் இருந்ததாக நாம் வாசிக்கிறபடியால், இந்த நிக்கொலாய் மதஸ்தர் சின்ன ஆசியாவில் பரவலாக இருந்துள்ளார்கள். இவர்களின் உண்மையான போதகம் என்னவென்று நமக்கு த்தெரியவில்லை. சிலர் **நிக்கொலாயி** என்ற பெயரிலிருந்துதான் இதுதான் அவர்கள் கொள்கையாக இருக்கக்கூடும் என்று கண்டுபிடிக்க முயன்றனர்.ஆனால் இதுதான் என்று உறுதியாக நமக்குத் தெரியாது. ஆனால், தெரியவில்லையென்பது ஒரு பிரச்சனையல்ல. கவனிக்கவேண்டியது யாதெனில், எப்படிப்பட்ட கொள்கையாக இருந்தாலும், தவறான அல்லது பொய்யான கொள்கைகளைக் கர்த்தர் வெறுக்கிறார். ஆகவே நாமும் பொய்வழிகள் எல்லாவற்றையும் வெறுக்கவேண்டும்.(சங்.119:104,128).


பெர்கமு சபைக்கான நிருபம், பொய் உபதேசங்களின் கடுமையை வன்மையாக வலியுறுத்துகிறது. கர்த்தருடைய சபையின் அடையாளத்திற்கு பொய் உபதேசம் ஒரு அச்சுறுத்தலாக உள்ளது. கொஞ்சம் புளித்தமா எல்லாவற்றையும் புளிப்பாக்கும். (1.கொரி.5:7) (கலா.5:9). ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கங்களைக் கெடுக்கும் என இது சொல்கிறது.(1.கொரி.15:33). பொய்யான கொள்கைகள் அரிபிளவையைப்போல படர்ந்து விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடும்.(2.தீமோ.2:16-18). ஆகவே, இந்த காரணத்திற்காக, ஒரு மணிநேரத்திற்குக்கூட இதை சகிக்ககூடாது. (கலா.2:5).கள்ளப்போதகர்கள் இனம் காணப்பட்டு, தவிர்க்கப்பட வேண்டும்.(ரோமர்.16:17).அவர்களைவிட்டு விலகவேண்டும்.(1.தீமோ.6:3-5).மற்றும் அவர்கள் ஒதுக்கப்படவேண்டும்.(தீத்து.3:10-11). பெர்கமு, தவறை சகித்துகொண்டிருந்தது. வசனம்.16-ல் கர்த்தர் ***"மனந்திரும்புங்கள் இல்லாவிட்டால்"*** என்று கூறுகிறார். கர்த்தர், அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் அவர்களிடமாக சீக்கிரத்தில் வந்து, தமது வாயின்பட்டயத்தால் அவர்களுக்கு எதிராக யுத்தம் பண்ணுவேன் என்று கூறுகிறார். இங்கே கிடைக்கிற முக்கியமான பாடம் என்னவெனில், நம்முடைய விசுவாசம் பொய்யான கொள்கைகளால் கறைப்படுவதற்கு நாம் அனுமதித்தால் அந்தவிசுவாசத்திற்காக மரிப்பதற்குகூட நாம் முன்வந்தாலும் ஜீவ கிரீடத்தை பெறுவதற்கு அது போதுமானதாக இருக்காது. இன்னும் சில சோதனைகளை மேற்கொள்வதும், சிலவற்றில் வீழ்ந்து போவதும் போதுமானதாக இருக்காது.

கிறிஸ்தவ ஜீவியத்தில் எதிர்வரும் எல்லாச் சோதனைகளையும் மேற்கொள்வது அவசியம். பெர்கமு சபைக்கு எழுதப்பட்ட கடிதம், ஜெயங்கொள்ளுகிறவனுக்கு என்ற இன்னும் ஒரு வாக்குத்தத்தோடு முடிகிறது. (வெளி.2:17).***"ஜெயங்கொள்ளுகிறவனுக்கு"***, இயேசு, மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும் அந்தக்கல்லின்மேல் எழுதப்பட்டதும், அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தைக் கொடுப்பார். பரலோகம் என்பது ஒரு ஆவிக்குரிய இடம். ஆகவே, அங்கு பழைய ஏற்பாட்டு மன்னாவும், குறிக்கல்லும் இருக்காது, ஆனால் மன்னா என்பது தேவன் இஸ்ரவேல் மக்களை வனாந்திரத்தில் நாற்பது ஆண்டு காலமாக குறைவின்றித் தாங்கினார் என்பதின் அடையாளமாக உள்ளது. அதைப்போல, தேவன் நம்மை நித்திய காலமாக எக்குறையும் இல்லாமல் தாங்கிக் காப்பார். வெண்மையான குறிக்கல் என்பது ஒரு விசாரணையில் ஒருவன் குற்றவாளி என்றும், நிரபராதி என்றும் தீர்ப்பளித்துக் கூறும் அக்கால பொதுவான முறையின் அடையாளமாக இருக்கலாம். வெண்மையானதொரு கல் ஒருவனை நிரபராதி என்று தீர்ப்பளித்துக்கூறுவதற்கும், கறுப்புக்கல் என்பது குற்றவாளி என்று தீர்ப்பளித்துக் கூறுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. அப்படியானால், ஜெயங்கொள்ளுகிறவன் நியாயத்தீர்ப்பு நாளில் கர்த்தரால் குற்றமற்றவன் என்று தீர்க்கப்படுவான். வெண்மையான கல் என்பது எதுவாக இருப்பினும், கர்த்தர் நமக்காக புதிய நாமத்தை அதில் எழுதுவார். கர்த்தர் நம்மை அவருடையவர்களாக நித்திய காலம் முழுவதும் அடையாளப்படுத்துவார். ஆனால், நாம் முதலாவது ஜெயங்கொள்ளவேண்டும்.

**Jon Macon** **EZSR**



# சிலுவையும் சபையும்



***ஆ**கையால் உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.* *(அப்.20:28)*

கிறிஸ்துவானவர் நமது பாவங்களுக்காக பலியாகக் கொடுக்கப்பட்டார் என்ற, புதிய ஏற்பாட்டுக் கோட்பாட்டை அறிந்தவர்கள், " ***சிலுவை இல்லாத கிறிஸ்து, பாவிகளை இரட்சிக்க எப்படி வல்லமையற்றவராயிருப்பாரே, அதுபோல், கிறிஸ்துவில்லாத சிலுவையும் இருக்கும்"*** என்பதை ஒத்துக்கொள்வார். இருப்பினும், சுவிசேஷத்தின் நற்செய்தி யாதெனில், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட, தேவத்துவத்தின் இரண்டாவது நபரான கிறிஸ்து, நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் தன் ஜீவனைக் கொடுத்தார் என்பது *(1.கொரி.15:3)*, கிறிஸ்து சிலுவையற்றவராகவும், சிலுவை கிறிஸ்து இல்லாதவராகவும் இருக்கவில்லை. ஆகையால், பாவியாகிய மனிதன் நம்பிக்கையற்றவனாக இல்லை.

மனிதனுக்காக, தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து, சிலுவையில் தன்னை தியாகமாய்த் தந்தார் என்பதே ஒட்டுமொத்த வேதாகமத்தின் மையக் கருத்தாக உள்ளது. தீர்க்க தரிசனங்களைக் கொண்ட பழைய ஏற்பாட்டின் பக்கங்களும், சரித்திர உண்மைகளை, தாங்கி நிற்கும் புதிய ஏற்பாட்டின் பக்கங்களும் இயேசுவின் இரத்தத்தால் நனைந்திருக்கிறது. Henny C. Trienen என்ற ஒருவர், இயேசுவின் வாழ்க்கையில், கடைசி மூன்று நாட்களின் சம்பவங்கள், நான்கு சுவிசேஷங்களின் ஐந்தில் ஒரு பகுதியை எடுத்துக்கொள்கிறது என்று கணக்கிட்டுள்ளார். இயேசுவின் மரணத்தைப்போலவே, அவருடைய மூன்றரை வருட ஊழிய காரியங்களும் முழு விபரங்களுடன் எழுதப்பட்டிருந்தால், சுவிசேஷ புத்தகங்கள் 8,400 பக்கங்களைக் கொண்டவையாக இருந்திருக்கும். இன்னும் R.A. Torrey என்பவர், புதிய ஏற்பாட்டிலுள்ள வசனங்களில் 53 வசனங்களுக்கு ஒரு முறை கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிய குறிப்பு உள்ளது என்கிறார்.

சிலுவையானது எல்லோருக்கும் கூட்டல் குறிக்கான பொருளோடும், உலகம் கழித்தல் குறிக்கான பொருளோடும் உள்ளது. வேதாகமத்திலிருந்து, சிலுவை எடுத்துப்போடப்பட்டிருக்குமானால், வேதாகமம், அடர்ந்த காட்டுப்பகுதியிலிருக்கும், ஒரு சத்தற்ற மரணத்துண்டு போலவே இருந்திருக்கும். பாவத்திற்காக, தெய்வீகமானவர் பலியாகக் கொடுக்கப்பட்டார் என்பதையும், அப்படி பலியாக கொடுக்கப்பட்டவர்

மரணத்திலிருந்து உயிர்தெழுந்தார் என்பதையும் மையமாககொண்ட ஒரே மார்க்கம், உலகிலேயே கிறிஸ்தவம் ஒன்றுதான்.

பாவமும் பாவிகளும், குற்றமும் தேவனற்ற தன்மையும், பிரிவினைகளும் பாடுகளும் நிறைந்த உலகில் சிலுவைதான் இரட்சிப்புக்கு தேவ பெலனாக இருக்கிறது. உலகத்தின் ஒட்டுமொத்த பிரச்சனைக்கு, இதுதேவனால் கொடுக்கப்பட்ட தீர்வாக உள்ளது. நம்முடைய பாவங்களுக்கு நிவாரணம் அவர்தான் அதாவது நாம் செய்த தவறுகளுக்கு விலை கொடுத்தவர். நமக்காக அதை சரிசெய்கிறார். ***"சிலுவையை பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாய் இருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாய் இருக்கிறது."*** (1கொரி.1:18) ***"நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்."*** (1.யோவான் 2:2)

நம்முடைய ஆவிக்குரிய போராட்டத்திலும், தேவனிடமிருந்து பிரிந்திருக்கும் நிலையிலும், தேவ ஐக்கிய குறைவிலும், சிலுவையானது சமாதானத்திற்கும், ஒப்புரவாக்குதலுக்குமான தேவனுடைய சாதனமாயிருக்கிறது. பவுல் ***"அவர் சிலுவையில் சிந்திய இரத்தித்தினாலே சமாதானத்தை உண்டாக்கி பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ள யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிகொள்ளவும் அவருக்கு பிரியமாயிற்று"*** என்கிறார். (1.கொரி.1:20) இன்னும், எபே.2:14-16 ல் ***"எப்படியெனில், அவரே நம்முடைய சமாதானகாரணாகி, இரு திறத்தாரையும் ஒன்றாகி பகையாக நின்ற பிரிவினையாகிய நடுசுவரைத் தகர்த்து....... பகையைச் சிலுவையினால் கொன்று அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாகின்றார்" என்று கூறுகின்றார்.***

ஆவிக்குரிய பசியும் வறுமையும் மிகுதியாக இருக்குமிடத்தில் தேவன் முழுமையாக மீட்பை அருளுகிறார். சிலுவையின் பாதத்தருகில் நீதியின் ஐசுவரியம் இலவசமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ***நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிறோம்.*** என்று பவுல் சொல்லியுள்ளார். (1.கொரி.1:23) மேலும் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து ***தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானர்*** என்று கூறியுள்ளார். (1.கொரி.1:30)

பரிசுத்த ஆவியானவர் எவ்விதக்கேள்விக்கும் இடமின்றி கிறிஸ்துவின் சிலுவையானது வேதாகமத்தில் மையச் செய்தியாய் இருக்கும்படி அதன் மீது ஒளி வீசச் செய்கிறார். மீட்பு சம்பந்தமான எல்லா உண்மைகளும் சிலுவையோடு இரண்டற கலந்திருக்கிறபடியால் சபையானது சூரியனிலிருந்து அதன் கதிர்கள் வருவதுபோலும் ஊற்று கண்ணிலிருந்து ஒரு ஓடை புறப்பட்டு வருவதுபோலவும் சிலுவையிலிருந்து புறப்பட்டு வரும் என ஒருவன் எதிர்ப்பார்க்க முடியும். புதிய ஏற்பாட்டை கவனமாக படிப்பது

இது உண்மையென உறுதிசெய்யும். கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவமும் சபை இல்லாத கிறிஸ்தவமும் இருக்கமுடியாது. அறிவுப்பூர்வமாக சிந்தித்தால் சரீரமற்ற உயிருள்ள தலையும், தலையற்ற உயிருள்ள சரீரமும் இருக்கமுடியாது என்று நமக்கு நன்றாக விளங்கும். இழந்துபோன மனுகுலத்துக்கு தேவனுடைய கிருபைவரமாய் பின்னிப்பிணைக்கப்பட்டு ஒன்றாக்கப்பட்ட திட்டமாய் சிலுவையும், சபையும் இருக்கிறதென்ற செய்தியானது சிலுவையின் மூலம் கிறிஸ்துவுக்குள்ஒரேசரீரமாகவும் அவரால்தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகவும் இருக்கும்படியாக தேவன் ஒரு புது குடும்பத்தை அழைக்கிறார்.

இக்கருத்தை நாம் மேலும் விபரமாக பார்ப்போம். சபையானது சிலுவையுடன் எப்படி தொடர்புடையதாய் இருக்கிறது?சிலுவையும் சபையும் ஒன்றுக்கொன்று என்ன உறவைக்கொண்டிருக்கிறது? சபைக்காக சிலுவை என்னசெய்கிறது?

## சபையானது சிலுவையால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது

முதலாவது, சிலுவையானது சபையை சிருஷ்டிக்கிறது. பாவிகள் மீட்கப்படுவதன் மூலம் சபைதோன்றுகிறது. சிலுவை இல்லையெனில் சபை இருக்கமுடியாது.

கிறிஸ்துவை இரட்சகராகவும்,தேவனுடைய குமாரானகவும் ஏற்றுக்கொண்டு அவருக்கு கீழப்படிதலுள்ள விசுவாசத்துடன் ஒருவன் செவிக்கொடுக்கும்போது கிறிஸ்துவின் இரத்தத்தால் அவன் தன் பாவங்களறக் கழுவப்படுகிறான். (அப்.22:16) அப்படி கழுவப்படுவதன் மூலம் புதிய ஏற்பாட்டால் சபை என்று அழைக்கப்படும். இரட்சிக்கபடுகிறவர்களோடும், மீட்கப்பட்டவர்களின் கூட்டத்தோடும் அவன் சேர்க்கப்படுகிறான். ***"ஆகையால் உங்களை குறித்தும் தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்து கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்."*** (அப்.20:28) சபைக்காக கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்பது தெளிவாக தெரிகிறது. கிறிஸ்து சபையை நேசித்து அவருக்காக தன்னை கொடுத்தார். (எபே.5:25,26) என்றுபவுல் கூறுகிறார். இவ்வுலகத்தில் கிறிஸ்துவுடனே ஐக்கியமாக இருந்து அவருடைய ஆவிக்குரிய பலிக்கு தங்களை ஒப்புக்கொடுக்கும் அழைக்கப்பட்ட மக்களை கொடுக்கவேண்டுமென்பதே கிறிஸ்துவினுடைய மரணத்தின் நோக்கம். அப்போஸ்தலன் பவுல், (இயேசு) நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும், நம்மைச் சுத்தகரிக்கும்படி, நமக்காகத் தம்மைதாமே ஒப்புக்கொடுத்தார். (தீத்து.2:14) என தீத்துவுக்கு சொன்னார்.அப்போஸ்தலன் பவுல், (இயேசு) நம்மைச் சகல அக்கிரமங்களினின்று . மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும், நம்மைச் சுத்தகரிக்கும்படி, நமக்காகத் தம்மைதாமே ஒப்புக்கொடுத்தார். (தீத்து.2:14) என தீத்துவுக்கு சொன்னார்.

**தொடரும்......**

**தமிழில் : EZSR**

## விசுவாசத்தின் அடிப்படைகள்-2

**தொடர்ச்சி**

ஐ) முன்னுரைக்கப்பட்டு பல நூற்றாண்டுக்குப்பின் முழுமையாக சரியாக நிறைவேறிய தீர்க்க தரிசனங்கள். மனிதர்களால் ஒருபோதும் செய்ய முடியாதவென்று. இது நிச்சயமாகவே தேவன் வேதாகமத்தை எழுதியதற்கு ஒரு அடையாளம்.

1. உதரணமாக சிலர் கிறிஸ்துவைக் குறித்தும் அவருடைய இராஜ்ஜியத்தைக் குறித்தும், அவர் இப்பூமிக்கு வருமுன்பே பழைய ஏற்பாட்டில் 456 முறை முன்னுரைக்கப்பட்டுள்ளது என்று கணக்கிட்டுள்ளனர்

.2. இந்த எடுத்தக்காட்டுகளை எண்ணிப் பாருங்கள்.

| | | தீர்ககதரிசனம் | நிறைவேறுதல் |
|---|---|---|---|
| (1) | மேசியாவைப் பற்றிய முதல் வாக்குத்தத்தம் | ஆதி 3:15 | கலா 4 : 4 |
| (2) | யூதா கோத்திரத்தில் பிறந்தவர் | ஆதி 44: 10 | வெளி 5: 5 |
| (3) | கன்னியின் வயிற்றில் பிறப்பார் | ஏசா 7 : 14 | மத் 1 : 23 |
| (4) | பெத்லேகேமில் பிறப்பார் | மீகா 5 : 2 | மத் 2 : 1- 6 |
| (5) | துக்கம் நிறைந்தவர் அசட்டைப் பண்ணப்பட்டவர் புறக்கணிக்கப்பட்டவர் | ஏசா.53: 2,3 | மத் 27 :30 |
| (6) | மற்றவர்களின் பாவங்களை சுமப்பவர் | ஏசா 53 :5,6 | 1பேது 2:4 |
| (7) | ஒரு நண்பனால் காட்டிக் கொடுக்கப்படுவார் | சங் 41 : 9 | மாற்கு 14 :10 |
| (8) | முப்பது வெள்ளிக் காசுக்காக காட்டி கொடுக்கப்பட்டார் | சகரியா 11 : 12,13 | மத் 26 : 15 |

### ஒ) பாகுபாடின்மை:

1. விலக்கியோ மனிதர்களால் எழுதப்பட்ட புத்தக்ங்கள் கருப்பொருளின் தன்மையை மேம்படுத்தியோ அல்லது தீமையை உறுதிப்படுத்தியோ எழுதப்படும்.இரண்டையும் ஒரு போதம் ஒன்று சேர்த்து எழுதமாட்டார்கள்.

2. இதை பைபிளோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

அ) நோவா நீதியைப் பிரசங்கித்தவர், ஆனால் மது மயக்கத்திலும் இருந்தவராக காட்டப்பட்டுள்ளார்.

ஆ) தாவீது - தேவனுடைய இருதயத்தக்கேற்ற மனுஷன். ஆனால் கொலை விபச்சாரம் பாவங்கள் குற்றமுள்ளவனாகவும் காட்டப்பட்டுள்ளார்.

இ) ஆபிரகாம் - தேவனிடத்தில் ஆழமான விசுவாசம் ஆனால் பார்வோனிடம் பொய் சொன்னார்.

ஈ) மிகப்பெரிய விசவாசம் சக்தியும் இருந்தது. ஆனால் மூன்றுதரம் கிறிஸ்துவை மறுதலித்தார் தேவன் பட்சபாதமற்றவர், ஆகவே நல்லது தீயது ஆகிய இரண்டையும் உரைத்தார்.

ஒ) உ) அழிக்க முடியாமை :

1. மத்தேயு 24: 35
2. வேதாகமத்தை அழிக்க முயற்சிகள்:

அ) ஏரேமியா 36 - யோயோக்கீம் ராஜா வேதத்தைக் கிழித்து போட்டான். ஆனால் தேவன் ஏரோமியாவைக் கொண்டு, பழைய சுருள்களை மறுபடியும் எழுதினார்.


ஆ) காத்தோலிக்க சபை தொடர்ந்து, வேதத்தின் செல்வாக்கை அழிக்க முயற்சித்தது. உதாரணமாக அதன் கார்டினல்கள் 1550-ல் போப்புக்கு எழுதிய வாசகத்தை பாருங்கள். ஆயினும் இன்னும் வேதாகம் நிலைத்திருக்கிறது.

இ) வால்ட்டோர் (1694-1778) இந்த பிரெஞ்சு தத்துவமேதை இன்னும் 100 வருடங்கள் ஒரு பைபிள் கூட இருக்காது என்றார். ஆனால் அவர் மறைவுக்கு பின் அவருடைய சகங்கள் வேதத்ததை அச்சிடவும் அவருடைய வீடு அவைகளை சேமித்து வைக்கவும் பயன்படுகிறது. வேதம் தேவனிடத்திலிருந்து வெந்தது என்பது நிச்சயம். அது என்றைக்கும் நிலைநிற்கும் என்பது உறுதி.

தொடரும்.....

G. தானியேல்

Charles Di Palma



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45-6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***

***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

*இயக்குநர்,*
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண் – 27, காங்கேயம் – 638 701.

வெளியிடுவோர்
**கிறிஸ்துவின் சபையார்,**
தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

**Published by Church of Christ, Kangayam.**
**Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,**